# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்புடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, பெப்ரவரி 22, 2019. இதழ் - 52









ஓராண்டு நிறைவில் அரங்கம்

பக்கம் - 03



உடைந்துபோன மனங்கள்... குடிமக்கள் குழுக்களின் தேவை...

பக்கம் - 03



கல்லடிப்பாலம் – தற்கொலைகள் – புன்னகைக்கும் மல்லிகைகள்

சில சிந்தனைகள்

பக்கம் -04



இயேசுநாதர் நடந்த அதே பாதையில்... வலி என்னும் வாழ்வின் நதி

பக்கம் - 12

## நிறுத்தப்பட்ட நிதியுதவியை சர்வதேச நாணய நிதியம் மீண்டும் வழங்குமா? அமைச்சர் விளக்கம்

--- அமிர்தஸன் ---

இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதை சர்வதேச நாணய நியதியம் நிறுத்தியுள்ள நிலையில் மீண்டும் அந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவிர தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நியதியத்தின் பிரதிநிதிகள் தற்போது கொழும்புக்கு வந்துள்ளனர் என்றும் அவர்கள் இலங்கை மத்திய வங்கி உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடுவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.


கொழும்பில் உள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு நிகழ்வொன்று ஹில்டன் ஹோட்டலில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. அங்கு அமைச்சர் மங்கள சமரவீர சிறப்புரையாற்றினார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதியில் இருந்து ஐம்பது நாட்கள் நீடித்த அரசியல் நெருக்கடியினால் பாரிய பொருளாதார பின்னடைவு ஏற்பட்டது என்றும் அமைச்சர் கூறினார்.

இந்தப் பொருளாதாரப் பின்னடைவுக்குப மகிந்த ராஜபக்சவே பெறுப்புக் கூறவேண்டும் என்றும் டிசம்பர் 17 ஆம் திகதியில் இருந்து இழந்துபோன பொருளாதார நஷ்டங்களை ஈடு செய்து வருவதாகவும் தெரிவித்தார். எதிர்வரும் காலங்களில் தனியார் துறையினருடன் மேலும் நெருக்கமாக செயற்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நடப்பு நிதியாண்டுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் நிதியை வழங்குமானால் புதிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றும் கூறிய அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச நாணய நிதியம் நிதியுதவிகளை வழங்க பல்வேறு நிபந்தனைகளை விதிப்பதாகவும் குறிப்பிட்டார்.

## விண் செல்லும் இலங்கையின் இராவணன்



இலங்கையைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் சேர்ந்து உருவாக்கிய செய்மதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த செய்மதிக்கு "இராவணாவன்" என்று பெயர்சூட்டப்பட்டுள்ளது. இது அளவில் சிறிய செய்மதி என ஆர்த்தர்சிகிளார்க் நிறுவனம் அறிவித்துள்ளது.
பொறியியலாளர் தரிந்துதயாரட்ன, ஆய்வுப் பொறியியலாளர் துலானி சாமிக்கா ஆகியோர் இணைந்து வடிவமைத்திருந்தார்கள்.

## இலங்கை கிரிக்கட்டின் புதிய தலைவர்



இலங்கை கிரிக்கட்டின் புதிய தலைவராக சம்மி சில்வா தெரிவாகியுள்ளார்.

2019/2021ம் ஆண்டுக்கான இலங்கை கிரிக்கட்டின் தலைவராகவே சம்மி சில்வா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கட்டின் உறுப்பினர்கள் சபையை தேர்வு செய்வதற்கான தேர்தல் வியாழனன்று நடந்தது.

விளையாட்டுத்துறை அமைச்சில் இதற்கான தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சம்மி சில்வா 83 வாக்குகளையும், ஜயந்த தர்மதாஸ 56 வாக்குகளையும் பெற்றனர்.




# மட்டு. மாவட்ட சிறுபோகச் செய்கை ஆரம்பக்கூட்ட தினங்கள் அறிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோகச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டங்களை, மார்ச் 01ம் திகதி முதல் 08ஆம் திகதிக்குள் நடத்தி முடிப்பதென, மட்டக்களப்பு மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று திங்கட்கிழமை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் மா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட விவசாயப்பணிப்பாளர் வை.பி.இக்பால், விவசாய பணிப்பாளர்(விரிவாக்கம், கே.பேரின்பராஜா, கமநல சேவைகள் மாவட்ட உதவிப்பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் (மத்தி) பொறியியலாளர் எஸ்.எம்.பி.எம்.அஸார் , நீர்ப்பாசனப்பணிப்பாளர் (மாகாணம்), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளிட்டோர் பங்கு கொண்டதுடன், விவசாயிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இத்தீர்மானத்தின்படி, சிறுபோகத்துக்கான ஆரம்பக் கூட்டங்கள் -

மண்முனை மேற்கு உன்னிச்சை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான கூட்டம், வவுணதீவு பிரதேச செயலகத்தில் மார்ச் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு, ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள உறுகாமம், கித்துள்வெள, வெலிகாகண்டி, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஆரம்பக் கூட்டம், செங்கலடி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

போரதீவுப்பற்று - நவகிரி, தும்பங்கேணி, சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் - வெல்லாவெளி கலாசார மண்டபத்தில் மார்ச் 02ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு, மண்முனை தென்மேற்கு - கடுக்காமுனை, புழுக்குணாவ, அடைச்ச கல், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஆரம்பக் கூட்டம், கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோரளைப்பற்று வடக்கு - கட்டுமுறிவு நீர்ப்பாசனம், மதுரங்கேணி, கிரிமிச்சை, சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஆரம்பக் கூட்டம், வாகரைப்பிரதேச செயலகத்தில் மார்ச் 08ஆம் திகதி காலை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு, கோரளைப்பற்று தெற்கு வாகனேரி, புணானை, தரவை, வடமுனை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான கூட்டம், கிரான் கோரகல்லிமடு ரெஜி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# மாவட்ட ஊடகப் பிரிவுகளுக்கு உதவி



அரசாங்க தகவல் திணைக்களம் மாவட்ட ஊடக பிரிவை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஊடகப் பிரிவுகளுக்கு வீடியோ புகைப்படக் கருவி கணணி மடிக்கணணி புகைப்பட பிரதி இயந்திரம் அடங்கலாக சுமார் 12 மில்லின் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இன்று காலை இடம்பெற்றது.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் மாகாணப் பணிப்பாளர் கந்தையா தவராஜா சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம்



திருகோணமலை மாவட்டத்தின் கொட்டியாரப்பற்று பள்ளிக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளரான கந்தையா தவராஜா சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம்.

கந்தையா விதானையார், மேரி கந்தையா ஆசிரியை ஆகியோரின் புதல்வரான கந்தையா தவராஜா அவரது ஆரம்பக்கல்வியை பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை, மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், தோப்பூர் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்றார். உயர்தரத்தினை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் சிறப்புப்பட்டம் பெற்றார்.

பல்கலைக்கழகக் காலத்தில் தமிழ்ச்சங்கத்தில் அங்கம் வகித்ததுடன், விவாதக்குழுவிலும் கவியரங்க நிகழ்வுகளிலும் சிறப்புக் காட்டி முத்திரை பத்தித்தார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டம் பெற்று, இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணிக் கல்வியும் கற்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன் சட்டத்தரணியாக கடந்த வாரம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# காரைதீவு உபதவிசாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

(காரைதீவு சகா)

காரைதீவு பிரதேசசபையின் உபதவிசாளர் ஏ.எம்.ஜாகீர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி ஒருமாத காலத்திற்கு சபை நடவடிக்கைகளிலிருந்து அவர் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் கி.ஜெயசிறில் குறித்த உபதவிசாளருக்கு வியாழனன்று (21) கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அதன்படி இம்மாதம் 12ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 12ஆம் திகதி வரை 1988.01.13ஆம் திகதிய 488/16ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட பிரதேசசபைக்கூட்டம் பற்றிய விதிகளின் 24(2)இன் பிரகாரம் சபை நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் திருகோணமலை உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அம்பாறை பிராந்திய

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# சட்ட விரோதமான முறையில் ஒரு தொகை சிப்பி மூடைகளை



அனுமதிப் பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் ஒரு தொகை சிப்பி மூடைகளை பழுதடைந்த லொறி ஒன்றில் ஏற்றி சென்றமை தொடர்பாக கல்குடா பொலிசார் லொறியின் சாரதியை கைது செய்துள்ளதுடன் லொரியினையும் கைப்பற்றியுள்ளதாக கல்குடா பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக் கிழமையன்று(18) கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள கருங்காலிச் சோலை பேத்தாழையில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்திற்கிடமான முறையில் மூடைகள் சிலவற்றினை ஏற்றிக் கொண்டு கல்குடா வீதியில் வந்த லொறியினை கல்குடா வீதி போக்குவரத்து பொலிசார் சோதனை செய்த போது அவை ஆற்றில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சிப்பிகள் என அடையாளம் கண்டனர்.

இவற்றினை வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தினால் அவை பொலிசாரால் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்தனர்.லொறி மற்றும் சாரதியினை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# மண்ணரிப்பைத் தடுக்க மரங்கள்



மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயச் செய்கையின் போது வறட்சி மற்றும் மண்ணரிப்பை தடுக்கும் முகமாகவும் இயற்கைச் சொத்துக்களை பாதுகாக்கும் நோக்குடனும் மண்முனை மேற்கு பிரதேச சபை - வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதிகளின் ஓரங்களில் பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டும் நிகழ்வு காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி யோகமலர் அஜித்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மண்முனை மேற்கு சபையின் தவிசாளர் எஸ்.சண்முகராஜா, அப் பிரதேச சபையின் செயலாளர் ஜேசர்வேஸ்வரன், முன்னாள் மட்டு. வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சுபா.சக்கரவத்தி, மண்முனை மேற்கு வலயக் கல்வி பணிமனையின் உயர் அதிகாரிகள் மண்முனை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஊழியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இப் பகுதியில் 07 வகையான சுமார் 800 மரக்கன்றுகள் இதன் போது நட்டு வைக்கப்பட்டன.

# கோப்பாய் பொலிஸ் நிலைய தற்காலிக பொறுப்பதிகாரி கைது



யாழ் செய்தியாளர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கோப்பாய் பொலிஸ் நிலைய தற்காலிக பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஈ. ஜி. குணரட்ண கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் வாள் வெட்டுச் சம்பவம் ஒன்று குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற தொலைக்காட்சி செய்தியாளரான நடராஜா குகராஜ் என்பவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

புதனன்று கைது செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர், யாழ் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, 50,000 ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# உடைந்துபோன மனங்கள்... குடிமக்கள் குழுக்களின் தேவை...

மனங்கள் இங்கு உடைந்துபோய் இருக்கின்றன. கடந்துபோன யுத்தம் இங்கு ஒட்டுமொத்த சமூகத்தின் மனதையும் உடைத்துவிட்டுச் சென்றிருக்கின்றது.

மேம்போக்காகச் சொல்லக்கூடிய ஒரு வார்த்த அல்ல இது. உடைவுகள் இங்கு ஆழமாக அனைத்துச் சமூகங்களின் மனதையும் தொட்டுச் சென்றிருக்கின்றன.

போரில் அழிக்கப்பட்ட, சேதப்படுத்தப்பட்ட சமூகங்கள் இங்கு கிழக்கில் ஊரூராக நொறுங்கிக் கிடக்கின்றன. மாதத்துக்கு மூன்று அல்லது நான்கு என்று இழப்புகளை அனுட்டிக்கும் அளவுக்கு இங்கு நிலைமை காணப்படுகின்றது.

இன்று நேற்றல்ல சுமார் 30 வருடங்களுக்கு முன்னதாக அழிக்கப்பட்ட கிராமங்கள்கூட இன்னமும் நினைவு தினங்களை அனுட்டிக்கின்றன. ஆனால், அந்த நினைவு தினங்களுக்கு அப்பால் அங்கு ஆற்றுப்படுத்தல் என்பதற்கே இடமில்லதாக பல கிராமங்களை கிழக்கிலங்கையில் இலகுவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தம்மை அழித்தவர்களுக்கு முன்பாகவே, அல்லது இடையிலேயே தொடர்ந்தும் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்கள் தொடர்ந்திருக்கிறார்கள். பயத்தில் இன்னமும் அப்படியே சமாளித்து வாழ்கிறார்கள். நல்லிணக்கத்துக்கான வாய்ப்புகள் எதுவும் இன்றி அப்படியே வாழப்பழகிக் கொள்கிறார்கள்.

நடந்துபோன அசம்பாவிதங்களால், கொடூரங்களால் மனம் பாதிக்கப்பட்ட பலர் தாம் ஒரு மன நோயாளி என்பதை அறியாமல் அப்படியே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் கதைகளை நேரடியாகக் கேட்கும் போது அவற்றில் இருந்துவிடுபட எமக்கே பல வாரங்கள் ஆகிவிடுகின்றன. அப்படியாயின் அவர்களின் நிலை என்ன?

போரில் இறந்தவர்கள் இறந்து போய்விட்டார்கள். அவ்வளவுதான். ஆனால், அவர்களை பறிகொடுத்தவர்கள் இன்னமும் அதே அச்சத்தில், அதே சூழ்நிலையில் வாழவேண்டிய நிலை தொடர்கிறது.

தமது உறவுகளை கொன்றவர்களின் கண்களுக்கு முன்பாகவே வாழும் நிலை கொடுமையானது. பல இடங்களில் பழி உணர்வு அப்படியே இருக்கின்றது. பழி தீர்க்க வழி இல்லையே என்ற குறைதான் அவர்கள் மனதில் காணப்படுகின்றது.

அரசாங்கமோ அல்லது அது சார்ந்த நிறுவனங்களோ சரியாக நல்லிணக்கம், மன்னிப்பு ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதாய் தெரியவில்லை. பல இடங்களில் அரசாங்க நிறுவனம் அல்லது அதன் படைகளே கொலைகாரர்களாக இருந்த சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன. விசாரணைகள் பல இடங்களில் நடக்கவில்லையாயினும், நடந்த சில விசாரணைகளிலாவது அரசாங்க நிறுவனமே / பாதுகாப்புப் படையே காரணம் என்பது தீர்ப்பாக வந்துள்ளது. அப்படியான சந்தர்ப்பங்களில்கூட எவரும் தண்டிக்கப்படவில்லை என்பது பாதிக்கப்பட்டவர்களின் கவலையாகத் தொடர்கிறது.

ஒட்டு மொத்தத்தில் தமக்காக எவருமில்லை, தமக்கு உதவ எவரும் இல்லை என்ற மனோநிலையில் கிழக்கின் பல கிராமங்கள் தினமும் செத்துக்கொண்டிருக்கின்றன.

சரியான நீதியும், பொறுப்புக்கூறலும் இல்லாமல் போனால், பாதிக்கப்பட்ட மக்கள் தமது நிலையில் இருந்து விடுபட வழியே கிடையாது. பலர் இதனைப் பற்றிக்கதைத்தாலும் நடவடிக்கை என்று எதுவும் ஆரோக்கியமாக எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

**சீவகன் பூபாலரட்ணம்**

அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் கூட இந்த விடயத்தில் தோற்றிருக்கின்றன என்றே தோன்றுகிறது. பிற இடங்களின் உதாரணங்களை இங்கு பொருத்திப் பார்க்க மட்டும் விளைவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது. பிறநாட்டு உதாரணங்கள் சில சந்தர்ப்பங்களில் பொருந்தலாம் ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருந்தும் என்று கூற முடியாது.

ஆற்றப்படா மனங்களின் அடுத்தகட்ட நடவடிக்கைகூட பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

இங்குதான் "சிட்டிசன் கமிட்டிகள்" என்ற குடிமக்கள் குழுக்களின் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், அதற்கான ஏற்பாடுகள் இங்கு வெற்றிகரமாக செயற்படுவதாகத் தெரியவில்லை.

மன ஆற்றல் மாத்திரமன்றி ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் சமூக, பொருளாதார அரசியல் தேவைகளையும் கையில் எடுத்துச் செயற்பட அப்படியான சுயமான குழுக்கள் இங்கு தேவைப்படுகின்றன. அவை எமது மக்களின் மத்தியில் அடிமட்டத்தில் இருந்து உருவாகுபவையாக இருக்க வேண்டும். அது பிராந்தியத்துக்கு, பிராந்தியம் என்று தனிமைப்படுத்தப்பட்டவையாக இல்லாமல், வடக்கு, கிழக்கின் அனைத்து தமிழ் மக்களின் பங்களிப்பையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

முதலில் இந்தச் சிட்டிசன் குழுக்கள் என்ற சிந்தனை எப்படியானது என்ற அறிவை பாதிக்கப்பட்ட மக்கள் பெற வேண்டும். தமக்கு தேவையான குழு எப்படி இருக்க வேண்டும் என்பதை மக்களே தீர்மானித்து உருவாக்க வேண்டும்.

போர்க்காலத்தில் கைது செய்யப்பட்ட ஆட்களை விடுவிப்பது மாத்திரம் சிட்டிசன் குழு அல்ல. அதன் கடமைகள் அதனையும் கடந்தவையாக இருக்க வேண்டும். அவை மக்களுக்கானவையாக, அவர்கள் பங்களிப்பில் உருவாக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

எங்கிருந்தோ ஒருவர் மணியை கட்டியாக வேண்டிய தேவை இங்கு கிழக்கில் இருக்கின்றது. அது வடக்கின் நிபுணத்துவத்தையும் உள்வாங்கியதாக இருக்க வேண்டும்.

---

# ஓராண்டு நிறைவில் அரங்கம்





கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பை மையம் கொண்ட பத்திரிகை ஒன்றின் தேவைப்பாடு நீண்ட காலமாக இருந்து வருகிறது. மட்டக்களப்பில் "கிழக்குத் தபால்" தொடக்கம் விடிவானம், தமிழ் அலை, தினக்கதிர்,தமிழ் ஓசை என்று இடையிடையே பத்திரிகைகள் வந்திருந்தாலும் வடக்கைப் போல பல பத்திரிகைகள் தொடர்ச்சியாகவும் பலம் மிக்கதாகவும் தொடரவில்லை. இந்தநிலை இன்றும் வடக்கில் தினசரி, வார இதழ், மாத இதழ் என்று தொடர்ந்தேர்ச்சியான பாரம்பரியம் உள்ளதாகவே இருக்கிறது.

மட்டக்களப்பில் தினக்கதிரின் காலம் ஒரு சிறப்பான காலமாகவும், மட்டக்களப்பிற்கான தேவையை மட்டக்களப்பே உணர்ந்த காலமாகவும் இருந்தது. அது இடை நடுவில் நின்று போனது துரதிர்ஷ்டவசமானது. இடையே பல முயற்சிகள் நடைபெற்றாலும், அந்த இடைவெளி நிரப்பப்படாத வெற்றிடமாக இருந்த வேளையில் தான் அரங்கத்தின் வரவு நிகழ்கிறது.

மட்டக்களப்பிற்கான பத்திரிகையின் தேவைப்பாட்டை "அரங்கம்" உணர்ந்து வார இதழாக, இலவசப் பிரதியாக வெளிவந்து ஐம்பது இதழையும் தாண்டி, ஐம்பத்திரண்டாவது இதழில் ஓராண்டில் நிமிர்ந்து நிற்கிறது.

இங்கு இரண்டு விடயங்களை நாம் நோக்க வேண்டும். ஒன்று வாரா வாரம் தொடர்ச்சியாக வெள்ளி தோறும் அரங்கம் வெளிவருவது. இரண்டாவது இலவச பிரதியாக தொடர்ந்து வெளிவருவது. இந்தச் சாதனையை இன்று வரை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது அரங்கம்.

மட்டக்களப்பின் கலை, பண்பாடு, இலக்கியம், கல்வி, சமூகம் அரசியல், விளையாட்டு, நாடகம், சினிமா, நிகழ்வுகள், தகவல்கள் போன்ற பல்வேறு கடந்த கால, நிகழ் கால விடயங்களை உள்ளடக்கி வருங்காலத்திற்கான ஓர் ஆவணப் பெட்டகமாக அரங்கம் வந்து கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பு தமிழர்களின் வாழ்வியற் கூறுகளை இங்கு தரிசிக்கலாம்.

அரங்கம் புதியவர்கள் பழையவர்கள் எனப் பலருக்கும் களமைத்து கொடுத்து வருகிறது. மூத்த எழுத்தாளர்களுடன் பல புதியவர்களும் எழுதாமல் ஒதுங்கி இருந்தவர்களும் இணைந்து வித்தியாசமாக எழுதி வருகிறார்கள். பல்கலைக்கழகம் சார்ந்தோர், சாராதோர்,ஊடகவியல் சார்ந்தோர், இலக்கியவாதிகள், விமர்சகர்கள், அரசியல் புலமையாளர்கள்,அரசியல் ஆய்வாளர்கள், மாணவர்கள் என்று பல தரப்பினருக்கும் இதில் அடங்குவர்.

**ச. மணிசேகரம்**

மட்டக்களப்பு என்றாலும் மட்டக்களப்பையும் தாண்டி வடக்கு, மலையகம், கொழும்பு என்று நாட்டின் பல பாகங்களிலும் இருந்து எழுதுவதுடன்,புலம்பெயர் பல நாடுகளிலும் உள்ள பல எழுத்தாளர்களும் படைப்பாளிகளும் எழுதி வருகிறார்கள். இது அரங்கத்திற்கு மிகப் பெரிய பலமாகும். எழுத்தாளர்களின் பெயர்களை பட்டியல் இட்டால் அது நீண்டு விடும்.

ஆழமான பல படைப்புகளும் அதேவேளை சாதாரண பத்திரிகை வாசகர்களை மனதில் கொண்டும் எளிமையான வடிவிலும் கால சூழலுக்கு ஏற்ப நீண்டதாக இல்லாமல் அளவானதாக பல படைப்புக்களை தாங்கி வெளி வருகிறது. சில கருத்துக்களில் தீவிர தன்மை போதாது என்பதுவும் எழுத்து அளவுகளிலும் பக்க வடிவமைப்பு போன்றவைகளில் மாற்றங்கள் நிகழ வேண்டும் என்ற கருத்தாடல்களிடையே, இலவச பிரதி என்பதனால் இலகுவாக சகலரிடையேயும் சென்றடைந்து விடுகிறது. இதுவே விளம்பரங்கள் செய்ய விரும்புவோருக்கு மிகப் பெரிய பலமாகும். பத்திரிகையின் தொடர் வருகைக்கு விளம்பரதாரர்களை ஊக்கப் படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கும் உண்டு.

கிழக்கின் தேவைப்பாடு உணர்ந்து அரங்கம் தினசரியாக உருவெடுக்க வேண்டும். அரங்கத்தின் வளர்ச்சி ஆலமரமாய் விரியட்டும்

# கல்லடிப்பாலம் – தற்கொலைகள் – புன்னகைக்கும் மல்லிகைகள் சில சிந்தனைகள்



கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலைகளும் தற்கொலை முயற்சிகளும் நடப்பதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் அதிகளவான தற்கொலை முயற்சிகள், தற்கொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடக்கின்றன என்ற கருத்து பரவலாக பலர் மத்தியிலும் பேசப்படுகின்றது.

அவ்வகையில் பரீட்சையில் தோல்வியுறல்', கடன் கட்டமுடியாமை, காதலில் விரக்தி, குடும்பப் பிரச்சனை முதலியவை தற்கொலைக்கான உடனடிக் காரணங்களாக காணப்படுகின்றன. இந்த தற்கொலை முயற்சியில் ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர், நடுத்தர வயதினர் என பல வகையினரும் அடங்குவர்.

நீர் நிலைகளில் பாய்ந்து, கடலில் மூழ்கி, விசம் அருந்தி, தூக்கில் தொங்கி, அலரி, நச்சுக்காய் விதைகளை உண்டு எனப் பல்வேறு முறைகளையும் தற்கொலைக்கு முயற்சிப்போர் கையாளுகின்றனர்.

கடந்த இரு மாதங்களில் நகரின் மத்தியில் உள்ள கறுத்த பாலம் என்று அழைக்கப்படும் கல்லடிப் பாலத்திலும் தற்கொலை முயற்சிகள் நடைபெற்றுள்ளன. இதில் பலர் இறந்து போயிருப்பதையும் காண்கின்றோம்.

மாநகரசபையில் நடைபெற்ற அமர்வான்றில் 'மட்டக்களப்பின் அடையாளமாக இருக்கின்ற கல்லடிப் பாலத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் தற்கொலைகளை கட்டுப்படுத்த உல்லாச பயணத்துறை சார்ந்த கடைத் தொகுதிகளை அமைப்பதனூடாக தொடர்ச்சியான பாதுகாப்பையும் பயன்பாட்டையும் மேற்கொள்வது' என தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றியதாக வலையத்தள ஊடகம் ஒன்று தெரிவித்திருந்தது.

தற்கொலையும் தற்கொலை முயற்சயும் மட்டக்களப்பில் மாத்திரம் நடைபெறும் விடயமல்ல. அது பொதுவாக தேசிய ரீதியிலும் பூகோள ரீதியிலும் நடக்கிற விடயம். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் உணர்ச்சிவசப்பட்டு ஒரு கணத்தில் எடுக்கின்ற முடிவினால் இவை நடக்கின்றன என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இது தொடர்பான புள்ளிவிபரங்கள் தேசியளவிலும் சர்வதேசவளவிலும் எமக்கு கிடைக்க கூடியதாக உள்ளன.

தற்கொலைகளுடனும் தற்கொலை முயற்சிகளுடனும் கல்லடிப் பாலம் அடையாளப்படுத்தப்பட்டதாலும் இவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மட்டக்களப்பை சார்ந்த சிலர் முயற்சி எடுத்தனர். தம்மை 'கரிசனையுள்ள நண்பர்கள்' என கூறிக் கொண்ட முப்பது, நாற்பது பேர் இம் மாதம் 9ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கல்லடி பாலத்தில் ஒன்று கூடினர். 'வாழ்வோம்' என்று பெரிய பதாதை ஒன்றை பாலத்தின் நுழைவாயில் கம்பிகளில் கட்டினர். அது தவிர வாழ்வின் மீதான நம்பிக்கையை கோரிய, பல்வேறு வண்ணங்களில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் கொழுவினர். இது மாத்திரமல்ல 'வாழ்வோம் நிமிர்வோம்' துண்டு பிரசுரத்தையும் விநியோகித்தனர். அந்த துண்டுப்பிரசுரம் பாலத்தால் வருவோர் போவோர் நடந்தும் சைக்கிளிலும் செல்வோர், அனைவருக்கும் விநியோகித்தனர். சிலர் அதை வாங்கி சென்றனர். சிலர் நின்று பார்த்தனர். ஒரு சிலர் சிறு உரையாடலிலும் ஈடுபட்டனர். கூடியிருந்தவர்களில் மதகுரு ஒருவரும் இருந்தார்.

நான் அங்கு போயிருந்த போது சற்று முன் பெய்த மழை ஈரத்தில் பலர், குறிப்பாகப் பெண்கள் உட்காந்திருந்தனர். ஒன்று கூடியோர் முன் நின்ற பெண் மதகுருவை ஓரிரு வார்த்தைகள் கூறும்படி அழைத்த போது அவர் வாழ்தலில் உள்ள முக்கியத்துவத்தையும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பது பற்றியும் பேசினார். பின்னர், கலந்து கொண்டவர்கள் தமது கருத்துக்களையும் தெரிவிக்கலாம் என்று அப் பெண் கூற, வந்தாறுமுலையிலிருந்து வந்திருந்த யுவதி தான் வரும் பொழுது மனதில் ஒரு கவிதை தோன்றியதாகச் சொல்லி; அதனை வாசித்தார். பின்னர் தலை நன்கு நரைத்திருந்த ஆண் ஒருவர் எழும்பி இவை ஏன் நடக்கின்றன என்று தீவிரமாக சிந்திக்க வேண்டும் எனும் சாராம்சம்படக் கதைத்தார். இன்னொரு பெண், 'கல்லடி பாலத்தில் மட்டுமல்ல, வீட்டின் மூலையில் நஞ்சருந்தியும், மோட்டுவளைவில் தூக்கில் தொங்கியும் கடலில் குதித்தும் கண நொடியில் உயிரை மாய்க்கும் முயற்சிகள் தொடர வேண்டாம்' என்ற கருத்துப்பட கவிதையை சொன்னார்.

இவையெல்லாம் முடிய இப்படியான விடையங்களை தடுப்பதற்கான செடி கொடிகளிலான ஒரு வேலியை பாலத்தில் அமைக்கும்படி மாநகர சபையை கோரும் கடிதமொன்றில் கையொப்பமிட்டனர்.

கிழக்கிலும் வடக்கிலும் யுத்தத்திற்கு பின்னர் தோன்றுகின்ற பிரச்சனைகளில் ஒன்றாக தற்கொலைகளும் தற்கொலை முயற்சிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. காணாமல் போதலால் ஏற்படுகின்ற வலிகள், வேதனைகள் இடப்பெயர்வால் ஏற்படுகின்ற வாழ்விழப்புகள் அதன் பின்னர் வாழ்வுக்கு உத்தரவு இல்லாமல் போதல் ஆதரவு இல்லாமல் போதல் ஏற்கனவே தாங்கள் பழகிய சூழலை இழத்தல் இப்படியான அழுத்தங்களால் ஏற்படுகின்ற விரக்திகள் அல்லது இத்தகைய பிரச்சனைகளுக்கு தேவையான ஆதரவு அமைப்புக்களாலும், சமூகத்தாலும் அரசாலும் அளிக்கப்படாத நிலையில் ஏற்படுகின்ற தடுமாற்றங்கள், விரக்திகள் இதனைப் போரின் பின்னாரான பேசு பொருளாக செய்து விடுகின்றன. ஆனால் அதே சமயம் போருக்கு நேரடியாக முகம் கொடுக்காத இளைஞர்களும் யுவதிகளும் இந்த விடயங்களில் ஈடுபடுகின்றார்கள். யுத்தத்தில் பாதிக்கப்படாதவர்களும் இதில் ஈடுபடுபவர்களாக காணப்படுகின்றார்கள் என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

என்னுடைய கருத்தின்படி 2017இல் அதிகமான தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக காணப்பட்டது. இவைகளில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்களில் அதிகமானவர்கள் பெண்களாகவும்; அந்த முயற்சிகள் தற்கொலையாக வந்து முடிகின்றபோது அதற்கு இரையானோர் அதிகம் ஆண்களாகவும் உள்ளனர். பெண்கள் அதிகமாக தூக்கில் தொங்கித்தான் தற்கொலை முயற்சிக்கின்றனர் அல்லது தற்கொலைக்கு இரையாகின்றார்கள்.

ஊடகங்கள் தற்கொலையை பாரிய பிரச்சனையாக எடுத்து காட்டுகின்றன. இது இதனை பிரச்சனையாக மட்டுமல்லாமல்; பிரச்சனைகளுக்கான தீர்வாக இருக்குமோ என்ற கருத்தையும் ஊடகங்களை பார்ப்போர் மத்தியில் ஏற்படுத்துகின்றன. அதிலும் தொலைக்காட்சிகளின் தொடர் நாடகங்களில் பிரச்சனைகள் வருகின்ற பொழுது பெரும்பாலாக பெண்கள் தற்கொலை செய்து கொள்வதையோ அல்லது தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதையோ தீர்வாக காட்டுகின்றனர். இத்தகைய தொடர்களை வீட்டில் பார்க்கின்றனர். இதுபற்றி அயலவர்களிடம் பேசுகின்றார்கள். பிள்ளைகளும் இதில் அடங்குவர். இவ் வகையில் இது பலர் மத்தியிலும் பிழையான கற்றலை ஏற்படுத்திவிடுகின்றது.

மௌ.சித்திரலேகா

தற்கொலைக்கு முக்கிய காரணங்களாக கடன், பரீட்சை காதலின் விரக்தி, வறுமை போன்ற வெவ்வேறு விதமான காரணங்களுடன்கூட பிள்ளைகள் துஸ்பிரயோத்திற்கு உள்ளாதல் - அடித்தல், அடக்குதல், திட்டுதல். தற்காலத்தில் பிள்ளைகளுக்கு விளையாடவோ, அக்கம் பக்கத்தாருடன் கதைக்கவோ, தன்னையொத்தவர்களுடன் பழகி சிரித்து மகிழ்வதற்கான பெரியளவான ஒரு தளத்தை நாம் அமைப்பது கிடையாது என்பது யாவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை. குறிப்பாக நடுத்தரவர்க்கத்தில் பிள்ளைகளை பரீட்சையில் சித்தியடைய செய்ய வேண்டும் என்றும் பெரிய பாடசாலையில் சேர்க்க வேண்டும் என்றும் உன்னுடைய பிள்ளையா என்னுடைய பிள்ளையா முதலில் வருவது என்று பெற்றோருக்கிடையிலான போட்டி காரணமாக பிள்ளைகளை பாடசாலைக்கும் அது தவிர்ந்த நேரங்களில் பிரத்தியேக வகுப்புக்களுக்கும் எப்பொழுதும் அனுப்புவதும்.

அவர்கள் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் கூட அவர்களை அனுப்புவது இன்னொரு விதம்மான மன அழுத்தத்தை அந்த இளம் பிஞ்சுகளிடையே ஏற்படுத்துகின்றது. அது வளர்கின்றது. ஒரு சமயத்தில் அந்த அழுத்தம் வெடிக்கப்பார்க்கின்றது. இது இன்னொரு முக்கியமான விடயம்.

இது மட்டுமல்லாமல் பிள்ளைகள் மீதான பாலியல் வன்முறை என்பதும் பேசாத பொருளாக உள்ள விடயம்.

பால்நிலை சார்ந்த துஸ்பிரயோகங்கள், வீட்டு வன்முறைகள், பாலியல் துன்புறுத்தல்கள் போன்றவையும் எமது சமூகத்தில் மேல் மட்டத்தில் பேசாத பொருளாக இருந்தாலும் கூட தற்பொழுது வெளியுலகிற்கு வருகின்ற விடயம். இதனால் பெண்கள் கூடியளவு மன அழுத்திற்கு உள்ளாகின்றார்கள்.. அவர்களுக்கு ஆதரவு தராத, வன்முறைகளுக்கு உள்ளாகுகின்ற பெண்களை சுட்டி, அவமானப்படுத்துவதையும் செய்கின்றோம். இவையும் தற்கொலை முயற்சிகளுக்கு ஏதுவாகின்றது

இதனால் பிள்ளைகளினதும் பெண்களினதும் மன அழுத்தங்கள், உள்ளுக்குள்ளேயே அடங்கி கிடக்கின்ற எண்ணங்கள், குழப்பங்கள் - இவை ஏதோ ஒரு கணத்தில் வெடித்து எழும்புகின்றன. அதற்குத் தீர்வாக தானே தன்னை அழித்தலை முடிவாக எடுக்கின்றனர்.

இவற்றையெல்லாம் மொத்தமாக பார்க்கின்ற பொழுது இவை பற்றி நாம் மிக அவதானமாக இருப்பது மிக முக்கியமானதாகும். கடைத் தொகுதி போடுவதாலோ அல்லது ஒரு இடத்தில் கட்டுப்படுத்துவதாலோ ஒழிந்து போகின்ற விடயமல்ல. ''கல்லடிப் பாலம் இல்லா விட்டால் ஓட்டமாவடி பாலத்தில் குதிப்போம்' என்று சிலர் வலையத்தளங்களில் எழுதியதையும் நான் பார்த்தேன். சீரியசாக கவனிக்க வேண்டிய விடயத்தை உதாசீனப்படுத்துகின்ற, நகைச்சுவைப்படுத்துகின்ற குறிப்பாகவே இது உள்ளது. இதை தட்டிக் கழித்துவிட முடியாது.



இதே போலதான் இம் மாதம் 12ம் திகதி பட்டப்பகலில் பானைகளை அடித்து உடைத்து அதன் துண்டுகளை பாலத்தின் கீழ் உள்ள தூண்களுக்கிடையே வீசியதும் நாம் இலகுவாக சின்ன பிள்ளைகளின் வேலை விசக் கிருமிகளின் வேலை என்று கடந்து செல்லக் கூடிய விடயமல்ல. எமது சமூக பொறுப்புடமையின்மையின் வெளிப்பாடா இது?

மனம் தளராது மீண்டும் அதே மல்லிகை கன்றுகளை கரிசனையுள்ளோர் நட்டார்கள். இன்றும், 8 நாட்கள் கடந்தும் கூட இரண்டு பெண்கள் தண்ணீர் ஊற்றுகின்றார்கள். அவ் இரு செடிகளும் தளிர் விட ஆரம்பித்திருக்கின்றன. பானையில்லா விட்டாலும் இரண்டு மல்லிகை செடிகளும் அவற்றுக்கான ஆதரவும் ஒரு விடயத்தை குறிப்பாக அல்லது குறியீடாக உணர்த்துகின்றன. பல்வேறு வகையான இழப்புகள் - சுனாமியும் போரும் தந்த இழப்புகளிலிருந்து மீண்டெழுகின்ற மீண்டெழ முனைகின்ற மட்டக்களப்பின் மீண்டெழும் நம்பிக்கையின் வடிவமாக இரண்டு செடிகளும் இன்று காற்றில் புன்னகைக்கின்றன.

# தரம் 10 சைவநெறிப் பாடநூல் மாணவர்களைக் குழப்புகிறதா?

## சுவாமி விபுலாநந்தரின் பிறந்த தேதியில் திடீர் மாற்றம்!




இலங்கை கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் இறுதியாக 2018இல் வெளியிட்ட தரம் 10 சைவநெறிப் பாடநூலில் பல வரலாற்றுத் தவறுகள் விடப்பட்டிருப்பதனையிட்டு விசனம் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

குறிப்பாக 16ஆம் பாடத்தில் 'சுவாமி விபுலாநந்தர்' பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் வெளிவந்த சைவநெறிப்பாடநூலில் சுவாமி விபுலாநந்தர் என்ற பாடத்தில் அவரது பிறந்ததிகதி 1892.03.27ஆம் திகதி என்றே குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. அதுவே சரியானதும்கூட.

ஆனால் இறுதியாக வெளிவந்த சைவநெறிப்பாடநூலில் இத்திகதி 03.05.1892 என திடீரென ஆசிரியருக்கோ ஆசிரிய ஆலோசகர்களுக்கோ தெரிவிக்காமல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தவறாகும்.

இந்த மாற்றத்திற்கான காரணத்தை தெரியப்படுத்தியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் இதுவரைகாலமும் ஒரு திகதியை வெளியிட்ட பாடநூல் திடீரென அத்திகதியை மாற்றியமை ஏற்றுக்கொள்ள முடியாதது. இதற்கு அனுமதி அளித்தது யார்?

இவ்வரலாற்றுத் தவறுகள் காரணமாக இலங்கைவாழ் இந்து தமிழ் மாணவர் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் குழப்பம் எழுந்துள்ளது. சுவாமிகளின் பிறந்த திகதியில் வேண்டுமென்றே குழப்பத்தை விளைவித்துள்ளது இந்தப்பாடநூல் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இத்திகதி இவ்வாறு திடீரென மாற்றப்பட்டு வந்தமை தொடர்பில் சுவாமிகள் பிறந்த காரைதீவில் கவலை நிலவுகிறது. வேறு பல இடங்களிலும் பரவலாக கண்டனமும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இது பற்றி கல்வியமைச்சுக்கு காரசாரமாக எழுதவிருக்கிறது என அதன் செயலாளர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.

சுவாமிகள் தொடர்பில் இதுவரை காலமும் வெளிவந்த அவர் தொடர்பான நூல்களில் 1892.03.27 எனக் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. அதுமட்டுமல்ல விக்கிபீடியா தொடக்கம் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் இருக்கின்ற அவரது (கல்லறை) சமாதியிலும் இந்தத் திகதியே பொறிக்கப்பட்டுள்ளது.

அவர் பிறந்த காரைதீவு மண்ணில் இதுபற்றி அறிந்தவர்கள் உதிரஉறவுகள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றனர். அண்மையில் மரணித்த அடிகளாரது மருமகள் திருமதி செ.கோமேதகவல்லி(கண்ணம்மாக்கா) சுவாமிகள் 27.03.1892ஆம் ஆண்டே பிறந்தார்என்று கூறியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல சுவாமிகள் பிறந்த திகதி தமிழ்பஞ்சாங்கத்தின்படி 1892 கரவருடம் பங்குனித்திங்கள் 16ஆம் நாள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இது விடயத்தில் இதுவரை வந்த சகல நூல்களிலும் இத்திகதியே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தமிழ்த் திகதிக்கு நேரொத்த ஆங்கிலத் திகதி 27.03.1892 என்பதனை அவ்வருடப் பஞ்சாங்கம் கொண்டறியலாம். இதனை காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும் இந்தக் கட்டுரை எழுத்தாளருமான வி.ரி.சகாதேவராஜா நிருபித்திருந்தார். இது தொடர்பாக பல கட்டுரைகளை ஆதாரத்துடன் வெளியிட்டிருந்தார்.

**காரைதீவு சகா**


நிலைமை அப்படியிருக்க ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்புவாழ்ந்த ஒரு பெரும் தமிழறிஞரின் பிறந்த திகதியை ஆண்டுக்கொரு திகதியாக இவ்வாறு மாற்றம் செய்துகொண்டு சென்றால் மாணவர்கள் ஆசிரியர்கள் எதனைப் பின்பற்றுவது என்று தெரியாமல் திணறுகின்றனர். பரீட்சைக்கு எதனை எழுதுவது என்று தெரியாமல் உள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் இது சுவாமியைக் அவமதிப்பதாகவும் அமைகிறது.

2014 2015 2016 களில் வெளிவந்த தரம் 10 சைவநெறிப் பாடநூலில் சுவாமியின் பிறந்ததிகதி 27.03.1892 என்றிருக்க இம்முறை 2018இல் வெளிவந்ததில் இவ்வாறு மாற்றியமைக்கக் காரணம் என்ன? என காரைதீவு மக்கள் வினவுகின்றனர்.
அதுமட்டுமல்ல தாங்கள் விரும்பியவாறு நூலாக்கக்குழுவினர் இப்படி மாற்றிக்கொண்டு செல்வதை அனுமதிக்கலாமா?

கல்வி அமைச்சின் இந்துசமய ஆலோசனைச்சபையின் ஆலோசனைகள் பெறப்பட்டு வெளியிடப்படுகின்றது என அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சைவநெறிப்பாடநூல் பற்றி சைவநெறி ஆசிரிய ஆலோசகர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ இதுவரை எந்தவித




அறிவித்தலும் விளக்கமும் அளிக்கவில்லையெனத் தெரியவருகிறது. அத்துடன் இப்புதிய பாடநூலுக்கான பாடத்திட்டங்களோ ஆசிரியர் வழிகாட்டிகளோ வழங்கப்படவில்லையெனவும் தெரிகிறது.

பாடநூல்கள் எப்போதும் சரியான தகவல்களை சரியான வரலாற்றை மாணவர்களுக்கு வழங்கவேண்டும். அது மாணவர்களைக் குழப்பக்கூடாது.

2014 2015 தரம்10 பாடநூல்களில் 'சுவாமி விபுலானந்தர் 'எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. 2018இல் அது 'சுவாமி விபுலாநந்தர் 'எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 'ந' 'ன' மாற்றம் தொடர்பாக விளக்கம்அளிக்கப்படவில்லை. ஆனால் விபுலாநந்தர் என்பதே சரி. அவர் பயன்படுத்திய அத்தனை ஆவணங்களிலும் விபுலாநந்தர் என்றே பதிவிட்டுள்ளார்.

சுவாமியின் இயற்பெயர் மயில்வாகனன் என்பதே சரியாகும் மயில்வாகனம் அல்ல. பாடநூலில் மயில்வாகனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே பாடநூலில் 5ஆவது பத்தியின் ஆரம்பத்தில் மயில்வாகனனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2ஆம் பந்தியின் இறுதியில் 'மயில்வாகனம்' என்று குறிப்பிட்டுவிட்டு 5 ஆம் பந்தியின் ஆரம்பத்தில் 'மயில்வாகனனார்' என்று குறிப்பிடுவது மாணவர் மத்தியில் முன்னுக்குப்பின் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது.

இது விடயம் தொடர்பில் இந்துகலாசார அமைச்சர், இந்துகலாசாரத் திணைக்களம் என்பன தலையிட்டு சரியான வரலாற்றை மாணவர்கள் அறியும்வண்ணம் செய்திடல் வேண்டும்.




## 37 வருட ஆசிரியர் சேவையிலிருந்து கணபதிப்பிள்ளை மகாலிங்கசிவம் ஓய்வு!



1982 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கல்முனை, மட்டக்களப்பு ஆகிய கல்வி மாவட்டங்களில் க.பொ.த.(உயர்தர) கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு இரசாயனவியல் பாடத்தைக் கற்பித்து, ஆயிரக்கணக்கான பட்டதாரிகள், வைத்தியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்களை உருவாக்கியவரும், தலைசிறந்த பேச்சாளரும், வர்ணனையாளருமான கணபதிப்பிள்ளை மகாலிங்கசிவம் தனது முப்பத்தேழு வருடக் கல்விச் சேவையிலிருந்து 60 ஆவது வயதில் 24.02.2019 அன்று ஓய்வு பெறுகிறார். இவர் மீன்கள் பாடும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமைந்த திருப்பழுகாமத்தில் பிறந்தவராவார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் தன்னுடைய ஆரம்ப, இடைநிலைக் கல்வியை மட்/ பட்/ திருப்பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை மட் / சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துப் பல்கலைக்கழகத்திலேயே தாவரவியல் Demonstrator ஆகவும் கடமையாற்றினார்.

1982.05.20 இல் ஆசிரியர் நியமனம் பெற்ற இவர் மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலை, திருப்பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம், பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம், சிவானந்தா தேசிய பாடசாலை, வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியர் பணியைச் சிறப்பாக மேற்கொண்டவர். அத்தோடு 1994 தொடக்கம் 2002 வரை சிவானந்தா தேசிய பாடசாலையில் பிரதி அதிபராகவும், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் பணி புரிந்துள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் கௌரவ செயலாளராகவும், திருப்பழுகாமம் இந்து கலாமன்றத்தின் ஆலோசகராகவும், மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் இல்லத்தின் தலைவருமாவார். சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்து வரும் இவர் சைவ சமயச் சொற்பொழிவுகளையும், நற்சிந்தனைகளையும் வழங்கி, சைவ சமய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார். அத்தோடு கந்தபுராணப் பாடல்களுக்குப் பொருள் சொல்பவராகவும், மட்டக்களப்பின் பல்வேறு ஆலய உற்சவங்களை தனது இனிய குரலால் வருணனை செய்தும் சமயப் பணியாற்றி வருகின்றார்.

-(க.கிருபாகரன்)



# பட்டறிவு


## கோத்திர சபையில் தொடுக்கப்படக்கூடிய வழக்குகள்

பண்டைய ஏழு கோறளைகளுக்கு சொந்தமான குளக்கரை (வாவிகளையும், குளங்களையும் அண்டிய கிராமங்கள்) கிராமிய கலாசாரத்திலும் பிராந்திய அதிகார மையங்கள் பற்றிய தகவல்கள் உள்ளன. குளக்கரை கிராமங்களில் கிராமிய மக்களின் பிரபுக்களாகத் திகழ்ந்தவர்கள், இந்தக் கோத்திரச் சபைகளின் அங்கத்தவர்களாக கடமையாற்றினார்கள். கிராமங்கள் சார்ந்த முடிவுகளை மேற்கொள்கையில், இவர்கள் நிறைவேற்று அதிகாரிகளாக செயற்பட்டார்கள்.

கோத்திர சபை விசாரிக்கக்கூடிய சாதிய வழக்குகளை 16 பிரிவுகளாக அடையாளம் கண்டோம் என்கிறார் பேராசிரியர் டீ.ஈ.ஹெட்டி ஆராச்சி. அவர் எழுதிய "சிங்கள சிரித் சங்ராய (1979)" (சிங்கள சட்டக் கோவை) என்கிற நூலில் இதைப் பட்டியல்படுத்தியிருக்கிறார்.

பிற சாதியில் மணமுடித்து ஒன்று கலத்தல் சாதிக்கு ஒவ்வாததைச் செய்தல். (கீழ் சாதி என்று கருதப்படும் ஒருவரை திருமணம் முடித்தல் அல்லது அப்படிப்பட்ட ஒரு ஆணுடன் செல்தல்.)
கணவர் இறந்ததும் இன்னொரு வெளி ஆணுடன் "கள்ளத் தொடர்புற்று" கர்ப்பமடைதல்
தமிழ், முஸ்லிம் (மரக்கல) அல்லது வேறு வெளியார் பெண்ணுடன் பாலுறவு கொள்தல்.
மாமியாரின் மகளைத் தவிர வேறெந்த உறவுப் பெண்ணுடனும் கூடுதல்.
கோத்திர சபையால் தண்டனை பெற்று சாதிக்கு அவப்பேரை ஏற்படுத்திய ஒருவருடன் உறவைப் பேணுவது
வேறு சாதிக்காரரின் திருமணப் பேச்சுச் சடங்கில் (பருசம்) உணவு உண்ணுதல்.
தண்டனை பெற்று, தடை விதிக்கப்பட்ட ஒருவருடன் சாதி சடங்குகளை பகிர்தல்.
குறைந்த சாதிக்காரர்களுடன் சேர்ந்து சொந்தச் சாதியைச் சேர்ந்தவர்களை நிந்திப்பது.
காரணமின்றி ஒருவரை நிந்திப்பது.
கோத்திர சபையின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடியவகையில் அவமதித்தல்.
கோத்திர சபையின் தீர்ப்புக்கு கீழ்படியாமை
முன்னனுமதி பெறாமல் கோத்திர சபையில் பேசுதல்.
சபையில் கைகால்களை உயர்த்திக் கதைத்தல்
ஊர்த்தலைவரின் ஆணையின்படி சபையின் பிரதானிகளுக்கு வழங்கவேண்டிய உபசரிப்பை செய்யாமை
சபையிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுமுன் வேறொரு முறைப்பாட்டை முன்வைத்தல்.

கோத்திர சபை வழங்கும் தண்டனைகளும் – தண்டப்பணமும்
1 - 5 வரையான பிரிவுகளை மீறியவர்கள் 500 வெள்ளிகள்
6-7 ஐ மீறியவர்களுக்கு 50 வெள்ளிக்கு




மேற்படாமல்
10 ஐ மீறியவர்களுக்கு 12 வெள்ளிகள்
11 ஐ மீறியவர்களுக்கு 7 வெள்ளிகள்
12 ஐ மீறியவர்களை சாதியிலிருந்து (ஊரிலிருந்து) வெளியேற்றல்
12-14 ஐ மீறியவர்களுக்கு 2 வெள்ளிகள்
15 ஐ மீறியவர்களுக்கு 7 வெள்ளிகள்
16 ஐ மீறியவர்களுக்கு 2 வெள்ளிகளும் வெற்றிலைகளும்

வடமத்திய மாகாணத்திலுள்ள "புல் எளிய" (Pul Eliya) என்கிற கிராமத்தை 1954 அளவில் தனியாக ஆராய்ச்சி செய்த ஈ.ஆர்.லீச் (E. R. Leach) [1] அந்த கிராமத்தைப் பற்றிய 368 பக்கங்களைக் கொண்ட ஒரு முக்கிய நூலை 1961 வெளியிட்டார். இந்த நூல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு பதிப்புகள் கண்டது. இந்த கிராமத்தை அவர் தெரிவு செய்ததற்கு முக்கிய வரலாற்றுக் காரணிகள் உண்டு.

இந்த நூலில் அவர் "வறிக சபா" பற்றிய தனியான ஒரு அத்தியாயத்தை எழுதி ஒரு வழக்கொன்றைப் பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார்.


கொழும்பிலிருந்து வந்து குடியேறிய ஆர்லிஸ் என்கிற தச்சன் மணமுடித்திருக்கும் பெண் வேறு சாதியைச் சேர்ந்தவள் என்று ஒரு முறைப்பாட்டை இந்த கோத்திர சபைக்கு கொண்டு சென்றார் கிரிஹாமி என்கிற நபர். இந்த வழக்கு இரவு பகலாக நடந்திருக்கிறது. இறுதியில் 550 வெள்ளிகளை தண்டப்பணமாக செலுத்த வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டு புலங்குலம திசாவவிடம் கோத்திர சபைத் தலைவர் ஒப்படைத்திருக்கிறார்.

அதன் பின் பெண் தரப்பைச் சேர்ந்த இரண்டு மைத்துனர்கள் கொழும்பிலுள்ள ஆர்லிஸின் வீட்டுக்கு விசாரிப்பதற்காகச் சென்றுள்ளார்கள். அங்கு அவர்கள் ஆர்லிஸ் ஒரு கொவிகம சாதியை (வெள்ளாள சாதியை) சேர்ந்தவர் தான் என்பதை உறுதிசெய்துகொண்டு திரும்பியிருக்கிறார்கள். அதாவது "வண்ணகுலசூரிய ஆர்லிஸ் பெர்னாண்டோ" என்கிற பெயர் கராவ சாதிக்குரிய பெயர் என்கிற புரிதலில்தான் இந்த வழக்கு நடந்திருக்கிறது. மனைவியின் அதே உயர்சாதியைச் சேர்ந்தவர் தான் ஆர்லிஸ் என்பது நிரூபணமான போதும் கோத்திரம் வித்தியாசம் என்கிற வாதத்தை அவர்கள் கிளப்பினார்கள். ஆக கோத்திர சபை தண்டப்பணத்தை 150 வெள்ளி ஆக குறைத்து கூடவே உபசரிப்புச் செலவு வெற்றிலை என்பவற்றை ஏற்கும்படி மறு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்த பணத்தை கோத்திரசபை உறுப்பினர்களான ஆறுபேரும் பிரித்துக்கொள்வது வழக்கம்.

இந்த நூலைப் பற்றி 2015ஆம் ஆண்டு ராவய பத்திரிகையில் ஒரு விமர்சனக் கட்டுரை வெளியாகியிருந்தது. கட்டுரையாளர் சில ஆண்டுகளுக்கு முன் அந்த கிராமத்துக்குச் சென்று சிறு கள ஆய்வொன்றை செய்திருக்கிறார்.[2] இப்போது அங்கு நிலைமைகள் மாறிவிட்டன. புல் எளிய கிராமத்தில் 73வயதுடைய வன்னிஹாமிகே ஹெரத்ஹாமி என்பவர் இப்படி கூறியிருக்கிறார்.

"தண்டப்பணமாக இத்தனை வெள்ளிகளை கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிப்பார்கள். தண்டனைக்கு உள்ளானவர் அதை கேள்வியின்றிச் செலுத்திவிடுவார். அத்தோடு பிரச்சினை தீர்ந்தது. பணத்தைப் பெற்றதும் கோத்திர சபைத் தலைவர்கள் அதை எடுத்துக்கொண்டு தமக்குள் பகிர்ந்து கொள்வார்கள். பணத்தைக் கொடுத்துவிட்டால் புறமணத் தடை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடுகிறது. இல்லையென்றால் அது பிழை என்றாகிவிடுகிறது. இது விசித்திரமானதொரு முறைமை. இது ஒரு மோசடிமிக்க சுரண்டல் அல்லவா?

இந்த கோத்திர சபை வெறும் தமது குலக்கோத்திரங்களுக்கு இடையில் மட்டும் வேறுபாடு பார்ப்பதில்லை. மாறாக தமிழர் – சிங்களவர் போன்ற வேற்று இனத்தவருடன் கலப்பது கூட தண்டனைக்கு உரிய குற்றமாக கொள்ளப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.
லீச் இந்த நூலில் ஒரிடத்தில் இப்படி




விளக்குகிறார்.

இனமும். சாதியும், கோத்திரம் வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டவை. உதாரணத்திற்கு புல் எளிய, மருதமடு ஆகிய இரண்டு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே இன, சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் கோத்திரம் வேறானதாக இருந்தால் அவர்கள் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது

என்.சரவணன்

தான் பொருள். அவர்களுக்கு இடையில் மணமுடிக்க முடியாது.

காணி விற்பனை சம்பந்தப்பட்ட விடயத்திலும் அதே கோத்திரத்தை சேர்ந்தவர்களுக்குத் தான் முன்னுரிமை அதன் பின்னர் தான் அடுத்தடுத்த படிநிலைவரிசையில் பார்த்து கோத்திர சபை அனுமதியளிப்பது அன்றைய வழக்கம். காணிகள் எப்படி விற்கப்பட்டன என்பது பற்றிய சில சம்பவங்களை தனது நூலில் லீச் விளக்கியுள்ளார்.

## யானைத் தொல்லையை எதிர்த்துப் போராட்டம்



(ருத்ரா)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திகிலிவெட்டை பிரதேச மக்கள் கடந்த புதன்கிழமை(20) யானையிடமிருந்து தங்களை பாதுகாத்துத் தருமாறு கோரி கிரான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மேற்குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயார் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் பிரதேசத்தின் மக்களிடையே பெரும் அச்சத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

காலை, பிரதேச செயலகத்திற்கு முன்பாக கூடிய மக்கள் வாசகங்களை எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'எங்கள் உயிர்கள் மிருகங்களுக்கு பலி கொடுக்கவா.. யானையினால் தொடரும் உயிரிழப்பை தொடர்ந்து தடுத்து நிறுத்து. யானைகளை சரணாலயத்தில் கொண்டு விடு இல்லேயேல் எங்களை சரணாலயத்தில் அடைத்து விடு. யானைகளை பாதுகாக்கும் அரசே மனிதர்களையும் காப்பாற்று, தமிழ் அரசியல் வாதிகளோ யானையுடன் கொண்டாட்டம், தமிழ் மக்கள் திண்டாட்டம்.'என்பன போன்ற வாசகங்களை எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியிருந்தனர்.

மாலை நேரமாகியதும் யானைகள் ஊருக்குள் வருவதனால் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாமல் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மலாய்த? மலேத? : அவரே கன்பீஸ் ஆகிட்டாரு!



இது நடந்தது போன வருடம். வியர்த்துக் கொட்டும் ஏப்ரல் மாதம். பணி நிமித்தம் கந்தளாய்க்குப் போயிருந்தேன். அங்கிருந்து திருக்கோணமலைக்குச் செல்ல வேண்டும். பேருந்தில் ஏறி அமர்ந்ததும் ஒருவன் இருக்கைக்கு அருகே வந்து 'மலேத?' என்று கேட்டான்.

அப்போதும் இப்போது போலவே சிங்களத்தில் கத்துக்குட்டி நான். 'மலேத' என்றால் என்ன? அவன் என் பதிலை எதிர்பார்க்காமல் பயணச்சீட்டுக் கொப்பியை விரித்தான். ஓ! நடத்துநர்! ஒருகணம் தடுமாறி விட்டு, போகும் இடத்தை சிங்களத்தில் சொல்லி பணத்தை நீட்டினேன் 'த்ரிகுணாமல எக்காய்'. அவன் மேலும் கீழும் பார்த்துவிட்டு என்னிடம் நூறு ரூபாய் வசூலித்தான்.

கந்தளாயிலிருந்து திருக்கோணமலை சுமார் 40 கி.மீ. தூரம். அந்தத் தூரத்துக்கு நூறு ரூபாயா? அது தனியார் பேருந்து, முதல் பயணம் வேறு. எதற்கு வம்பு என்று பேசாமல் இருந்து விட்டேன். அடுத்த தடவை திருக்கோணமலையிலிருந்து கந்தளாய்க்கு பயணச்சீட்டு எடுத்த போதுதான் பயணச்சீட்டு வெறும் 50 ரூபாய் தான் என்று தெரிந்தது.

பிறகு திருக்கோணமலையில் சிங்கள அதிகாரி ஒருவரை அலுவல் நிமித்தம் சந்திக்கவேண்டி இருந்தது. கொஞ்சம் மூத்தவர். குறிப்பிட்ட பணிக்காக நான் வெகுதொலைவு வந்திருந்ததால் என் மீது அதிகமாகவே இரக்கம் காட்டினார். உத்தியோகபூர்வமான உரையாடல் முடிந்ததும், சாதாரணமான சுக விசாரிப்புக்கு பேச்சு மாறியது. அவர் அன்போடு, 'புத்தே மலாய்த?' என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதே கேள்வி. அங்கே மலேத. இங்கே மலாய்த. 'காவலன்' திரைப்பட வடிவேலு போல அவரே கன்பீஸ் ஆகிட்டாரோ? இல்ல ரெண்டும் ஒண்டு தானா? மண்ணாங்கட்டி, சிங்களத்தில அப்பிடி எண்டா என்னவா இருக்கும்?

சீச்சீ இரண்டும் ஒன்றாக இருக்காது. மலாய்? இவர் என்னைப் பார்த்து மலாய் இனத்தவனா என்று கேட்கிறார்! இந்த ஆளுக்குக் கண் என்ன குருடா, இந்த அட்டக்கரி நிறத்தைப் பார்த்த பிறகும் இப்படிக் கேட்பதற்கு? ஒருவேளை என் கண்களைப் பார்த்து அவர் மலாய் இனத்தவன் என்று நினைத்தாரோ! இருக்கலாம். கபில நிறக் கண்மணிகள். அந்தக் கண்களைப் பார்த்து என் சிங்கள நண்பிகள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்...... சரி சரி, அதெல்லாம் இப்போது இந்தக் கட்டுரைக்குத் தேவையா, என்ன?

'நான் மலாய் இல்லை, தமிழ், இலங்கைத் தமிழ்' என்று ஆங்கிலத்தில் பதிலளித்தேன். அவர் சிரித்தபடி தமிழில் சொன்னார் 'நான் சொந்த ஊர் கேட்டன் மகன். திருகோணமலையா எண்டு, மலையா?'

இதைத் தான் அந்த நடத்துனனும் போகும் இடத்தை 'மலேத? மலேத?' என்று கேட்டு தலையில் அடித்துக்கொண்டானா? என் முகத்தில் லீற்றர் கணக்கில் அசடு வழியத்தொடங்கியது.

திருக்கோணமலை அல்லது த்ரிகுணாமலே என்பதை சிங்களவர்கள் மலே என்றே சுருக்கமாக அழைக்கிறார்கள் என்று அன்று தான் தெரிந்துகொண்டேன். இது யாரோ புதுசா வந்திருக்கிற இளிச்சவாய் என்று நினைத்து, அந்த நடத்துநன் என்னிடம் ஐம்பது ரூபாய் கொள்ளையடித்ததில் தப்பே இல்லை.

வேலை முடிந்து ஊருக்குத் திரும்புவதற்காக பேருந்தில் ஏறி அமர்ந்தேன். தூரத்தே கோணமாமலை கடந்து சென்றது. உண்மையில் சிங்களவர் நீட்டி முழக்க அலுப்பில் தான் திருக்கோணமலையை 'மலை' என்று சுருக்கி அழைக்கிறார்களா? பத்து மாதங்கள் கடந்த பின்னர் அறிந்து கொண்டேன். இல்லை, அப்படி அழைப்பது மரபு, பாரம்பரியம், அதற்கென்றும் நீண்ட வரலாறு இருக்கிறது!

பொலனறுவையில் கிடைத்த கல்வெட்டொன்று பற்றி அண்மையில் வாசிக்கக் கிடைத்தது. அது இப்போது எங்கே இருக்கின்றது என்று தெரியவில்லை. அதைத் தேடியும் தன்னால் கண்டறிய முடியவில்லை என்று பதிவு செய்திருக்கிறார் பேராசிரியர்.சி.பத்மநாதன். சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன் அந்தக் கல்வெட்டை வாசித்த தொல்பொருள் அறிஞர் ஆவேலுப்பிள்ளை அவர்களால் எடுக்கப்பட்ட மைப்படி மட்டுமே இன்று எஞ்சியிருக்கிறது.

'ஈழம் எழுநூற்றுக்காதமும் யெறிஞ்சு கொண்டருளிய செயபாகு தேவர் நிழல் வேளைக்காறன் மலைமண்டல நாயக்கனான சேதராயன்' என்பது அந்தக் கல்வெட்டிலுள்ள வரிகள். இந்த எழுத்து பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குரியது. இலங்கை வரலாற்றில் வருகின்ற ஜயபாகு எனும் பெயர் படைத்த மன்னர்கள் இருவர். இருவரும் முறையே பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், பதினைந்தாம் நூற்றாண்டிலும் ஆண்டவர்கள்.

முதலாம் ஜயபாகு மன்னன் ஓராண்டே ஆட்சிபுரிந்தவன். ஆனால் அவனது ஆட்சியாண்டுகளைச் சொல்லி தமிழ்மொழியில்கூட ஏராளமான கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. மகாவம்சத்திலோ, ஜயபாகு பற்றிய ஏனைய சான்றுகளிலோ கிடைக்காத 'எழுநூற்றுக்காதமும் எறிந்த' என்ற பட்டம் வருவதால், இவன் வேறொரு ஜயபாகு என்ற முடிவுக்கு வந்திருக்கிறார் பேராசிரியர் என்றால், இந்தக் கல்வெட்டு சொல்கின்ற செயபாகு தேவர் யார்? சிங்கள வரலாற்று நூல்களில் கலிங்க மாகோன் குறிப்பிடப்படும் சில இடங்களில், ஜயபாகு எனும் துணையரசன் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறான். எனவே இவனே அவன் ஆகவேண்டும்.

இங்கு வரும் மலைமண்டலம் என்பதற்கு மூன்றுவிதமாகப் பொருள் கொள்ளலாம். ஒன்று மலையரட்டை என்று மகாவம்சத்தில் சொல்லப்படும் இலங்கையின் இன்றைய மலையகப் பகுதி. இரண்டு, தமிழ் இலக்கியங்களில் மலைநாடாகப் போற்றப்படும் சேரநாட்டு மலையாளக்கரை. மூன்றாவது திருக்கோணமலை.

திருக்கோணமலை, வெறுமனே 'மலை' என்றும் அழைக்கப்பட்டது என்பதற்கு கங்குவேலியில் கிடைத்த இன்னொரு கல்வெட்டும் சான்றாகின்றது. 'மலையில் வன்னியனார்' என்பவரும் ஏழு ஊர்களின் அடப்பரும் கூடி, கங்குவேலியில் கோணைநாதருக்கு வயல்களைக் காணிக்கை செய்ததை அக்கல்வெட்டு கூறுகின்றது. திருக்கோணமலை முன்பு திருக்கோணமலைப்பற்று, தம்பலகாமம்பற்று, கொட்டியாரம்பற்று, கட்டுக்குளம்பற்று என்று நான்கு பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த ஒவ்வொரு பற்றையும் ஒவ்வொரு வன்னியர்கள் பரிபாலித்து வந்தனர். எனவே மலையில் வன்னியனார் என்பது திருக்கோணமலைப்பற்று வன்னியனாரைக் குறிக்கும்.

**துலாஞ்சனன்**

மலைமண்டல நாயக்கன் பற்றிய குறிப்பு கிடைத்த பொலனறுவையின் புவியியல் அமைவிடத்தைச் சிந்திக்கும் போது, கேரளம், மலையகம், திருக்கோணமலை ஆகிய மூன்றில் திருக்கோணமலையே மிக நெருக்கமானதாக இருக்கின்றது.

எனவே சேதராயன் என்பவன் திருக்கோணமலைப் பகுதியின் நிர்வாகப் பொறுப்பில் பதவி வகித்த ஒருவன் என்பதும், அவன் ஜயபாகு தேவரின் பிரதிநிதியாக (நிழல்?) அங்கு ஆண்டிருக்கின்றான் என்றும் இதை விரித்துப் பொருள்கொள்ளமுடியும்.

திருக்கோணமலையை 'மலை' என்று சுருக்கமாக அழைப்பது இன்று வெறும் மக்கள் வழக்கு. ஆனால் அந்தச் சுருக்கப் பெயருக்குப் பின்னேயும் ஒரு கதை இருக்கிறது என்பதை அறிந்துகொண்ட போது நான் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை. நாம் ஒவ்வொருவரும் எத்தனையோ சரடுகளால் இழைக்கப்பட்ட வரலாற்றின் மீது தான் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறோம் என்பது தான் எத்தனை திகைப்பை ஊட்டுகின்றது?

(ஆர்வமுள்ளவர்கள் பேராசிரியர் சி.பத்மநாதனின் இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் நூலின் முதலாம் இரண்டாம் பாகங்களை வாசிக்கலாம், இலங்கை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடு)



# மட்டுநகரா! மாட்டு நகரா?

பாதாளப் பார்வை
- அவதானியார் -







# இராணுவமுகாம் வடிவில் முல்லை இல்லம்







மழைவிட்டும் தூவம் விடவில்லை என்பார்கள். அதுபோல காரைதீவு விபுலாநந்த மத்தியகல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் இல்ல வடிவமைப்புச் சோடனையில் முல்லை இல்லம் இராணுவமுகாம் வடிவில் நிருமாணிக்கப்பட்டிருந்தது. அதிதிகள் உள்ளிட்ட அனைவரும் வியந்துபோனார்கள். மாணவர்களின் பாதுகாப்புகருதி இவ்ஏற்பாட்டை தாம் சித்திரிப்பதாக இல்ல பொறுப்பாசிரியர் பிரதீஸ் தெரிவித்தார். அதனையே இங்குகாண்கிறீர்கள்

படங்கள் காரைதீவு நிருபர் சகா





## எமக்கான ஒரு சினிமாவை நோக்கி...



எமக்கான "சினிமா" ஒன்றை வளர்ப்பதற்கு உதவும் வகையில் "அரங்கம்" நிறுவனத்தின் முயற்சியில் தயாரிக்கப்படவுள்ள திரைப்படத்தில் நடிக்க மற்றும் சினிமாவின் ஏனைய துறையில் பணியாற்ற கலைஞர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

நேர்முக நடிகர் மற்றும் கலைஞர் தேர்வுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

E-MAIL : arangamcinema@gmail.com

# மட்டு மாநகர சபை

## ஆதனங்களுக்கு வரி செலுத்துவோம் !

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்



பொதுவாக நாம் ஒவ்வொரும் ஒரு வீட்டில் வாழ்கின்றோம். சொந்தமாக நிலம் உள்ளவர்கள் அதிகமானோர். அந்த நிலத்தில் நாமாக வீடுகளைகட்டி நிம்மதியாக வாழ்ந்து வருகின்றோம். ஆனால் நமது உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குகின்ற சேவைகளை நாம் பெறுகையில்தான் நமது தேவைகள் முழுமையாக நிறைவடைகின்றன. நமக்காக நமது உள்ளூராட்சி மன்றங்கள் சில சேவைகளைத் தொடர்ந்து வழங்கிவருகின்றன. அதற்காக எந்தக் கட்டணமும் அறவிடுவதில்லை. இவ்வாறு சேவை செய்வதற்கான செலவுகளை ஈடுசெய்வதற்காக காணி உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படுவதே ஆதன வரியாகும். இதனைச் சோலைவரி எனவும் அழைப்பர்.

ஒவ்வொரு காணிக்கும், அது வெற்றுக் நிலமாயினும், கட்டடங்களோடு கூடிய காணியாயினும் அதன் ஆண்டுப் பெறுமானம் கணிக்கப்பட்டு, அப் பெறுமானத்தில் குறித்த விகிதம் வரியாக அறவிடப்படுகிறது. ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமது பிரதேசம் கட்டடங்களோடுகூடிய விருத்தியடைந்த பிரதேசமெனப் பிரகடனப்படுத்தி, அந்த பிரதேசத்தில் உள்ள காணிகளுக்கு முறையான இலக்கமிட்டு, வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தின்மூலம் பெறுமானம் கணிக்கப்பட்டு, அந்த ஆண்டு வருமானத்தில் சுமார் 10 வீதம் அளவில் வரியாகச் செலுத்துமாறு எழுத்து மூலம் உரிமையாளருக்கு அறிவிக்கும். உரிமையாளர் ஆண்டு தொடக்கத்தில் அந்த வரியின் முழு தொகையையும் செலுத்துவராயின் அதற்கான ஊக்குவிப்பாக கணிசமான கழிவு வழங்கப்படும். அவ்வாறு விதிக்கப்படுகின்ற வரியைச் செலுத்த ஒவ்வொரு காணி உரிமையாளரும் சட்டரீதியாகக் கடமைப்பட்டுள்ளனர்.

இந்த ஆதன வரியினை ஒழுங்காகச் செலுத்துவதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்படுகின்ற கட்டணமற்ற சேவைகளை ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் பெறமுடியும். அதாவது வீதிகளை பயன்படுத்துதல், குப்பையகற்றல், தெரு வெளிச்சம் பெறுதல் போன்ற பிரதான சேவைகளுடன், விளையாட்டு மைதானம், பூங்காக்கள், பொது நூலகங்கள் போன்ற சேவைகளையும் பெறமுடிகின்றது. அதுமட்டுமல்லாது ஆதன உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆதன வரி செலுத்தாது போனால் குறித்த ஆதன உரிமையாளருக்கு இரண்டாவது ஆண்டில் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு அவ்வாதனத்திலுள்ள வரி நிலுவைக்குப் பெறுமதியான பொருளை எடுத்துச் செல்ல உள்ளூராட்சி மன்றங்களுக்கு சட்டபூர்வமான அதிகாரம் உள்ளது. அவ்வாறு பொருள்களை எடுத்துச்செல்வது 'நடுக்கட்டு செய்தல்' எனப்படும். இவ்வாறு பொருள்கள் கொண்டு செல்லப்பட்டால் அதனை மீளப் பெற சபைக்கு ஏற்பட்ட நிர்வாகச் செலவுடன்கூடிய முழுத்தொகையையும் உரிமையாளர் செலுத்த வேண்டும். இல்லையானால் அப்பொருள்கள் ஏலத்தில் விற்கப்பட்டு உரிய பெறுமானத்தை உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும்.

மட்டக்களப்பு மாநகர சபை இந்த ஆதன வரியை இலகுவாக



பெறுவதற்காக ஆசிய நிறுவனம் பல இலகுபடுத்தல் செயல்முறைகளை அறிமுகம்செய்து, அதன்மூலம் சீராக வரி பெறக்கூடிய ஒரு முறைமையை உருவாக்கியுள்ளமை சிறப்பம்சமாகும். ஆதன வரி வருமானத்தின் மூலம் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் மிக அதிகமான வருமானத்தைப்பெறுவதுடன், மக்களுக்கான சேவைகளைச் சீராக வழங்கவும்முடிகின்றது. எனவே பொதுவான சேவைகளைக் கட்டணமின்றிப்பெறுகின்ற நாம், சட்டமுறையான ஆதனவரியைத் தவறாது செலுத்தி, நமது ஆதனம் நமக்கே என்பதை உறுதிப்படுத்துவோம்.

## யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிம் சுட்டான் மட்டக்களப்பு மாநகர சபைக்கான விஜயம்



யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிம் சுட்டான் மட்டக்களப்பு மாநகர சபைக்கான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவில் மட்டக்களப்பு மாநகரினை சிறுவர் சினேகபூர்வ மாநகரமாக மாற்றியமைக்கும் செயற்றிட்டத்தினை ஆரம்பிக்கும் நோக்கோடு இந்த உத்தியோகபூர்வ விஜயமானது அமைந்திருந்தது.




## ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

16

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---



மூலஸ்தானத்திலிருந்து பக்தர்களுக்கு அருள்புரியும் நரசிம்ம வைரவர் எழுந்தருளியாக வெளிவருகையில் சிம்ம நாதமாக வெளிவருவார், இருந்தருளி எழுந்தருளி எனும் சொற்கள் பெருதெய்வ உரையாடல் என்பது நினைவிற்கொள்ளத்தக்கது. வெளியில் கோழிப்பலி கொள்வது இச்சிம்ம நாதமெனும் தெய்வமே. கோவில்சடங்கின் இறுதிநாள் கதவுபூட்டுதல் ஆகும். அன்று இரவு நரசிங்க வைரவருக்கு ஆட்டின் தலை அரிந்து பலியிடுவர். அதன் பின்னரே கதவு பூட்டப்படும், பூட்டிய கதவு அடுத்த வருடம்தான் திறக்கப்படும். சிங்க நாதம் போல உருக்கொண்டு ஆடி மக்களோடு பேசி உறவாடும் வேறு சிறு தெய்வங்களும் உண்டு.

## ஏனைய சிறு தெய்வங்களும் அவை ஆடும் முறைமைகளும்

சிம்மநாதம் போலவே மாரி அம்மன், காளி அம்மன், கங்கா தேவி, வைரவர், நீலாசோதயன், பிறத்தி சங்கிலிக் காளி, முத்துக்கிழவி ஆகிய தெய்வங்களும் குறிப்பிட்ட சிலரில் வெளிப்படும். அத்தெய்வங்களுக்குரிய பாடல்களைப் பாட அவைகளும் ஆட்டமிடும். ஆடுபவர்கள் தமது பாவனைகளினால் அத்தெய்வங்கள் போல அபிநயிப்பர். உதாரணமாக மாரி அம்மனுக்கு ஆடுபவர் சில நேரங்களில் சேலை அணிந்து முக்காடிட்டுக் கொண்டே பெண் போல அபிநயித்து சிலம்பணிந்து வேப்பம் பத்திரத்துடன் பிரம்பும் பிடித்தாடுவார். (வேப்பம் பத்திரமும். பிரம்பும் மாரியம்மனுக்கு மாத்திரமே உரியது என்பது இங்கு ஐதீகம்.) காளிக்கு ஆடுபவர் கைகளை அகல விரித்து கண்களை உருட்டி விழித்து நாக்கை வெளியே தொங்கவிட்டு (சிலவேளைகளில் நாக்கைச் சிவப்பாகக் காட்ட அதிற் குங்குமம் பூசி) ஆடுவார். வைரவருக்கு ஆடுபவர் கையில் அலங்காரமான பொல் ஒன்றை வைத்திருப்பார். (காவலுக்கு அது அடையாளம்.)

இவ்வண்ணம் தெய்வங்களைப் போலச் செய்யும் ஒரு பண்பினை இச்சிறு தெய்வ வழிபாட்டிற் காண்கிறோம். தெய்வம் ஆடுபவர்கள் முன்பு நடந்ததைப் போல அல்லது தாம் அறிந்த தெய்வங்களைப் போல ஆடுவதற்கென்று உடுப்பணிந்து பார்வையாளர்களிலிருந்து வேறாகிச் செய்ய, அவர்களை ஆட்டுவிக்கும் அண்ணாவிமாராக பூசகர்கள் செயற்படுகிறார்கள். ஆட்டமுறையிலும், அபிநய முறையிலும் நடைபெறும் இக்காட்சியை தவில், உடுக்கு, சலங்கை, சிலம்பு, அம்மனைக்காய் ஆகிய வாத்தியங்களும், மந்திரம் போன்ற உச்சாடனங்களும், காவியம், தாலாட்டு, கும்மி, அகவல் இசைகளிலமைந்த பாடல்களும் அழகுபடுத்துகின்றன. மக்களே இக்காட்சியின் பார்வையாளர்களாவர். கோயில் வெளி என்ற மேடையைச் சூழ அமர்ந்து இக்காட்சியினைக் காணும் பார்வையாளர்களிற் சிலர் தாம் ஒரு நாடகத்தை காண்கிறோம் என்ற நினைவிலன்றி, தாம் வாழ்வோடு இயைந்த ஒரு சடங்கில் பங்கு கொள்கிறோம் என்ற நினைவில் பங்கு கொள்வோராகவும் இடையிடையே மாறுகின்றனர்.

நரசிங்கம் ஆடுகையில் பார்வையாளராயும், வதனமார் ஆடுகையில் மாடுகளாயும், காத்தவராயனின் கட்டுக் கேட்கும் பெண்களாயும் பங்குகொள்வோராக மக்களிற் பலர் மாறி விடுகிறார்கள். இங்குள்ள படம் ஒரு கோயில் எவ்வாறு மேடையாகப் பயன்படுகிறது என்பதையும் மக்கள் எவ்வாறு பார்வையாளராக எங்கிருந்து பார்க்கிறார்கள் என்பதையும் காண்பிக்கிறது.

பிற்காலத்து நாடக மேடையினதும். பார்வையாளர்களினதும், இருக்கையினதும் மூல அம்சங்களை இக்கோயில் அமைப்பிற் காணக் கூடியதாய் உள்ளது.

## நரசிங்க வைரவர் கோயில் ஒன்றின் அமைப்பும், அதிற் காணப்படும் நாடக அரங்கு அமிசங்களும்"

இலக்க விளக்கங்கள்

1.பொதுமக்கள் கோயிலுக்கு வரும் வழி – பிரதான வாசல்
2, பெண்கள் வரும் வாசல்.
3.ஆண்கள் அமர்ந்து சடங்கு பார்க்கும் பகுதி.
4.,பெண்கள் அமர்ந்து சடங்கு பார்க்கும் பகுதி.
5.வதனமார் பந்தல்.
6. ஐயனார் பந்தல்
7.காத்தவராயன் பந்தல்.
8..அம்மன் கோயில் (சிறிய கோயில்).
9,காளிதேவி பந்தல்.
10. மடப்பள்ளி.
11. பெண்கள் பாவிக்கும் கிணறு.
12. நரசிங்க வைரவர் கோயில் (பெரிய கோயில்)
13. தெய்வம் ஏறி ஆடுவோரும், பூசாரியாரும் தங்கும் குடிசை.
14. கோயிற் கிணறு. (தெய்வம் ஏறி ஆடுவோரும், பூசாரியாரும் மாத்திரம் குளிக்கும் கிணறு)
15. மாறா தெய்வப் பந்தல். –
16. திரி சூல வைரவர் பந்தல்.
17. மடப்பள்ளி வைரவர்.
18. கொடிமரம் (சிங்கநாத வைரவருக்குரியது).
19. கங்காதேவி பந்தல்.
20. ஆண்கள் உபயோகிக்கும் கிணறு.
21. நரசிங்கம் பலி கொள்ளும் இடம் (ஆடும் இடம்).
22. வதனமார் மாடு கட்டுமிடம்.
23. கிரகசாந்தி பந்தல்.


மேற்காட்டிய படம் ஒரு கோயிலின் அமைப்பையும் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளின் இயக்கப் போக்கையும் காட்டுகின்றது.




அம்புக் குறிகள் பலி எடுக்கும் போதும், மாடு கட்டி ஓடும் பொழுதும் வினாசகப்பானை சுற்றும் போதும் ஆலத்திக் கன்னிமாரை கோயில் வலமாகக் கொண்டுவரும் போதும் தெய்வக்காரர் வரும் வழியைக் காட்டுகின்றன

விநாயகப் பானை கொண்டு வரும் போதும் ஆரத்தி எடுக்கும் கன்னிமாரை கோயில் வலமாகக் கொண்டு வரும்போதும் ஆடிவரும் தெய்வங்களுடனும், கூடவரும் பூசாரிமாருடனும் சேர்ந்து குரவையிட்டு, கற்பூரச் சட்டி தாங்கி இக்காட்சியில் பங்காளராக இருக்கும் பொது மக்கள், கோழிப்பலி எடுத்து நரசிங்க வைரவர் கோயிலைச் சுற்றி தாளத்திற்கேற்ப ஆடிவரும்போதும், வதனமார் மாடு கட்டி ஓடிவரும்போதும் அமைதியாக இருந்து அக்காட்சியைக் காணும் பார்வையாளராக இருப்பர்.

இன்னும் பந்தலுக்குப் பந்தல் ஒவ்வோர் தெய்வமும் ஆடுகையிலும் கொடிமரத்தடியில் (இல.18) நின்று இறுதி நாளன்று தெய்வங்கள் ஊஞ்சலாடுகையிலும் சாட்டை அடி வாங்குகையிலும், எல்லாரும் சுற்றியிருந்து



அக்காட்சியைப் பார்த்து இரசிக்கும் பார்வையாளராய் இருப்பர்.

ஆண்கள் வேறு பெண்கள் வேறாயிருந்து பார்க்கும் வழக்கம் இன்று தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படாவிடினும் மிகச் சமீப காலம் வரை அவ்வழக்கம் இருந்து வந்திருக்கிறது.

அம்மன் கோயிலிலும், பெரிய கோயிலிலும் சடங்கு நடைபெறுகையில் அதற்குள் நின்று தீப ஆராதனை கண்டு அம்மனையும், நரசிங்கரையும் வணங்கும் பொது மக்கள் (அங்கும் ஆண் பெண் வெவ்வெறாக நின்று வணங்கும் வழக்கம்.) தீபாராதனை முடிந்து பந்தலுக்குப் பந்தல் தெய்வங்கள் பூசகரின் பாடலுக்கு ஏற்ப ஆடுகையில் (இதனை தெய்வம் விளையாடல் என இங்கு அழைப்பர்) படத்தில் காட்டியபடி இரு மருங்கிலும் நின்று பார்வையிடுவார்கள்.

இக்கோயில் அமைப்பிலே பிற்கால நாடக அரங்கிற்குரிய தன்மைகள் சிலவற்றையும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் நாடக அமிசங்கள் சிலவற்றையும் நாம் காணமுடிகிறது.

(தொடரும்)

---

# மூதாதையரின் காலடிகள்

## கன்னியா

இலங்கையின் புகழ் பெற்ற சோமசுந்தரப் புலவர் கன்னியா பற்றி இப்படிப் பாடியிருப்பார்.

'காதலனை பிரிந்தவளின் மனம் போல ஒன்று

கவி பாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று

தீது பழி கேட்டவன் தன் மனம் போல ஒன்று

செய்த பிழைக் கலங்குபவன் மனம் போல ஒன்று

நீதி பெறா வேழைதுயர் மனம் போல ஒன்று

நிறைபழித்த கற்புடையாள் மனம் போல ஒன்று

காது மழுக் காறுடையான் மனம் போல ஒன்று

கனலேறு மெழு நீர்கள் உண்டு கன்னி யாயில்'



கன்னியா திருமலை நகரிலிருந்து கிட்டத்தட்ட நான்கு கல் தொலைவில் உள்ள தமிழர்களின் தொல் நிலங்களில் ஒன்று.

கன்னியா என பெயர் வரக் காரணம் என்ன என்று கேள்வி எழும் போது, முன்னய காலத்தில் கண்ணகி வழிபாடு முக்கியப்பட்ட இடமாக இது இருந்திருக்கலாம் எனவும் அதுவே திரிந்து, கன்னியா ஆகியிருக்கலாம் என்றும் வாய் மொழி தகவல்கள் கூறுகின்றன.

புராணங்களும் ஐதீகங்களும் கன்னியாவை தமிழர் தொன்மை வரலாற்றோடு தொடர்புபடுத்தி நிற்கின்றன.

திராவிடத் தமிழ் மன்னனாகிய இராவணன் இலங்கை முழுவதையும் ஆண்டவன் என்பதற்கு இலங்கையில் தென் எல்லையில் உள்ள இராவணன் கோட்டையும் மத்தியில் உள்ள சீதா எலியவும் திருகோணமலையில் உள்ள இராவணன் வெட்டும் கன்னியாவில் உள்ள ஏழு சுடு தண்ணி கிணறுகளும் சாட்சியாய் நீள்கின்றன.

''கன்னியாவில் அமைந்துள்ள ஏழு வெந்நீரூற்றுக் கிணற்றுகளுக்கெனத் தனித்துவமான வரலாற்றுக் கதையும் உள்ளது. இற்றைக்கு கி.மு. 5000 ஆணடுகளுக்கு முன்னர், சிவபெருமானின் தீவிர பக்தனாக இருந்த திராவிட மன்னனான இராவணன் திருக்கோணமலையில் குடிகொண்டிருக்கும் கோணேஸ்வரர் கோயிலுக்கு சென்றான். அங்கு வீற்றிருந்த சிவலிங்கத்தைக் கண்டு வியந்து அந்த லிங்கத்தை அவனின் தாயின் வணக்கத்திற்காக கொண்டு செல்ல விரும்பினான். இதனால் பாறையின் மீது இருந்த சிவலிங்கத்தை தனது வாளால் வெட்டி பெயர்த்து எடுக்க முற்பட்டான்.
இதனால் கடும் கோபம் கொண்ட சிவன் அந்த பாறையை தனது காலால் அழுத்தியதால் இந்தப் பாறைக்குள் சிக்குண்டான் இராவணன். இதைக் கேள்வியுற்ற அவன் தாய் தனது மகன் இறந்து விட்டதாக எண்ணி அதிர்ச்சியில் உயிரிழந்தாள். ஆனால், இராவணனோ சிவனை பிரார்த்தனை செய்து தாம் செய்த செயலை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். இராவணனின் பக்தியைக் கண்டு நெகிழ்ந்த சிவபெருமான் அவனை மன்னித்து, நீண்ட ஆயுளும் கொடுத்து சிவலிங்கத்தையும் எடுத்துச் செல்ல அனுமதித்தார்.

கோணநாயகரிடம் பெற்ற லிங்கத்தை கையிலேந்திக் கொண்டு இராவணன் செல்லும் போது, விஷ்ணு அந்தண வடிவம் எடுத்து இராவணனைச் சந்தித்து தாயார் உயிர் நீத்த செய்தியைத் தெரிவித்தார்.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

இதைக் கேட்டதும் இராவணன் கடும் துன்பத்தில் மூழ்கினான். அந்தணன் அவரைத் தேற்றிய பின் அன்னையின் இறுதிக் கிரியைகளைச் செய்யுமாறு நினைவுறுத்தி, இப்புண்ணிய தலத்தில் ஈமக்கிரியைகளைச் செய்தால் அவர்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 2)

### நெசவு

மனிதனின் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றான ஆடையைத் தருவதில் நெசவு மிக முக்கியமானதாகும். என்னதான் இயந்திரப் பாவனைகள் வந்த போதிலும் கைத்தறி நெசவிற்கான கேள்வி குறையவில்லை. இம்மாகாணத்தில் நெசவுக் கைவினை வரலாறு தொன்மையானதாகும். அன்றிலிருந்து இன்றுவரை கைத்தறி நெசவு அம்பாறை மாவட்டத்தின் மருதமுனைக் கிராமத்தின் பிரதான வருமானமீட்டும் மூலமாகத் திகழ்கின்றது. ஆரம்பத்தில் குழித்தறி போன்றவை பயன்படுத்தப்பட்டிருப்பினும் தற்போது கைத்தறியே நெசவு செய்யப் பயன்படுகின்றது. பாவு எனப்படும் நூல்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வர்ணமிட்டு நூற்கட்டைகளில் சுற்றப்படுகின்றன. இந்நூற்கட்டைகளைப் பயன்படுத்தி கைத்தறியில் துணி நெய்யப்படுகின்றது. பெரும்பாலும் சாறன், புடைவை, ஆண்கள் சட்டைத் துணி, கட்டில் விரிப்புகள், திரைச் சீலைகள் போன்றவையும், பெண்களுக்கான ஏனைய ஆடைகள், லுங்கிகள், கைப்பைகள், சுவர் அலங்காரக் கொழுவிகள் போன்றவையும் நெய்யப்படுகின்றன. அலங்காரங்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் கரை, கனவடிவ, பெட்டி அலங்காரங்களே பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மத ரீதியான செல்வாக்கும் காரணமாக அமைகின்றது. சில சந்தர்ப்பங்களில் நெய்யப்பட்ட துணிகளில் நிறச் சாயங்களைக் கொண்டு அலங்காரங்களும் இடப்படுகின்றன. முழுக்க முழுக்க மனித செயற்பாட்டையே நம்பிச் செய்யப்படும் நெசவுக் கைவினையானது மூலப்பொருள், மனித உழைப்பு காரணமாக உயர் பெறுமதியைக் கொண்டுள்ளது.



காலநிலைச் சுவாத்தியமும் இம்மாகாண மக்கள் கைத்தறி உற்பத்திகளைப் பயன்படுத்தக் காரணமாவதோடு சுற்றுலாத் துறையின் வளர்ச்சியிலும் நெசவுக் கைவினைகள் பங்களிக்கின்றன. வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் மருதமுனை நெசவு உற்பத்திகளைத் தேடி வருவது இதற்குச் சான்றாகும். தற்காலத்தில் நெசவு உற்பத்திகள் நாகரிக அடையாளமாகவும், நுகர்வோருக்கு இயைபானதாகவும், நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய பங்குதாரராகவும் அமைகின்றன. இருப்பினும் இவ்வுற்பத்திகள் வெளிநாட்டு, உள்நாட்டு நுகர்வோரைக் கவரும் வகையில் இலகுவாக விற்பனை செய்வதிலும், மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும், போட்டியாக வந்துள்ள இயந்திர நெசவினாலும் பல பிரச்சினைகளை நெசவாளர்கள் எதிர் கொள்கின்றனர்.

### மட்பாண்டம்

மூலப் பொருளான களிமண்ணைப் பெற்றுக் கொள்ள இயலுமான புவியியல் தோற்றத்தைக் கொண்டிருக்கும் இறக்காமம் எனப்படும் அம்பாறை மாவட்டத்தின் ஒரு கிராமம் மட்பாண்டக் கைவினைகளுக்கு பிரசித்தி பெற்றுள்ளது. இதனை அண்டியுள்ள ஏனைய சிங்களப் பிரதேசங்களிலும் பெருவாரியாக இக்கைவினை மேற்கொள்ளப்படுகின்றது.

அகழப்படும் களி மண்ணை தேவைக்கேற்ப பதப்படுத்தப்படுத்தி, வனைதற் சக்கரத்தின் உதவி கொண்டு பாண்டங்களை வடிவமைக்கின்றனர். அதிகமாகத் தமிழ், மற்றும் சிங்கள மக்களே இத்துறையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு அவர்களிடமுள்ள தேர்ச்சியும் காரணமாகும். அநேகமாக சமையற் பாண்டங்கள் செய்யப்பட்டாலும் தற்போது படைப்பாற்றல் மிக்க அலங்காரப் பொருள் களும் செய்யப்படுகின்றன.

ஆ.யு. நூருல் அஸ்மாஹ்
கல்முனை

வெற்றிலைத் தட்டு, மலர்ச்சட்டி, பழம் ஏந்தி, அலங்கார மணிகள், விலங்குருவங்கள் என்பன வனைதற் சக்கரம், அச்சுக்களில் உதவி கொண்டு வனையப்படுகின்றன. தேவை ஏற்படும் போது (Enamel) வர்ணமும் அலங்கரிக்க உதவுகின்றது. வனையப்படும் பாத்திரங்களைச் சுடுவதற்காக வைக்கோற் சூளைகள் உதவுகின்றன.

தேசிய அலங்காரங்கள், விலங் குருக்கள், வெட்டுருக்கள் என்பன மட்பாண்ட அலங்காரங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையிலிருப்பதால் மட்பாண்டக் கைவினையானது பிரதானமாக வருவாய் ஈட்டும் தொழிலாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

தொடர்ச்சியான களி அகழ்வு என்பது சிறியதோர் புவியியல் பாதிப்பாக அமைந்த போதிலும், கிழக்கின் கால நிலைச் சுவாத்தியம், ஆரோக்கியம் என்பவற்றின் அடிப்படையில் மட்பாண்டக் கைவினையானது அவசியமானதொன்றாகும். அதேவேளை பாண்ட வனைஞர்களுக்கான தொழில் ரீதியான வளங்களைப் பெறுவதிலும், அவற்றை நுகர்வோருக்கு விற்பனை செய்வதிலும் உள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டு தீர்வு வழங்கப்படுவதும், புவியியல் சேதத்தினை ஈடு செய்யும் செயன் முறை ஒன்றை வழங்குவதும், அவர்கள் எதிர் நோக்கும் சூழல்சார் குறிப்பாக யானை போன்ற மிருகங்களின் தாக்குதல்களைக் குறைக்கும் வழி முறைகளை வழங்குவதும் அவசியமாக உள்ளது.

### பன் கைப்பணிப் பொருள்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் பன்னிலான கைவினைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பன் புல் வளர்ப்பதற்கேற்ற புவியியல் அமைப்பும் இதற்கு காரணமாக அமைகின்றது. கல் பன், புல் பன் போன்ற பல் வகையான பன் புற்களைக் கொண்டு பாய், பெட்டி, தட்டு, அகப்பை கொழுவி, அலங்காரப் பொருள்கள், காசுப் பை, கைப்பை போன்றவை பின்னப்படுகின்றன.

பன் புல்லினை உற்பத்தி செய்ய

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# இயேசுநாதர் நடந்த அதே பாதையில்... வலி என்னும் வாழ்வின் நதி




இன்று மதியம் யெரூசலேம் நகரத்தின் பழைய நகரத்தினுள் யேசுநாதரை கொலைசெய்வதற்கு முன் அவரை அழைத்துச்சென்ற பாதையில் நடந்துகொண்டிருந்தேன்.

ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு முன்னான அன்றும், வருடத்தின் ஆரம்ப மாதங்களாகையால் இன்றைய



பொழுதினைப்போன்று குளிராகவும், சற்று அதிகமான காற்று வீசிக்கொண்டும் இருந்திருக்கலாம்.

அன்றைய தினம் அவர் முதுகில் பாரமானதொரு மரக்கட்டை ஒன்றை வைத்திருந்தார்களாம். இதுவே பிற்காலத்தில் சிலுவையாக மாறியது என்று ஒரு சுற்றுலா வழிகாட்டி அங்கிருந்தவர்களுக்கு இன்றும் கூறிக்கொண்டிருந்தார். இந்தக் கதையை இரண்டு வெவ்வெறு சுற்றுலா வழிகாட்டிகள் பல மாத இடைவெளியில் சொல்லக்கேட்டிருக்கிறேன்.



மிக ஒடுக்கமான ஓடை போன்ற கடைத்தெருக்களின் மத்தியில் யேசுநாதர் அழைத்துச் செல்லப் பட்டிருக்கிறார். அவர் ஏழு தடவைகள் சுற்றுச்சுவர்களில் கையை வைத்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாராம். அந்த ஏழு இடங்களும் இன்றும் இருக்கின்றன.

சுற்றுலாப்பயணிகள் தங்கள் கைகளை அக்கற்களில் வைத்து, கண்மூடித் தியானித்து, தங்களின் பாரங்களை இறக்கி, மனதை இலகுவாக்கிக்கொள்கிறார்கள்.

இன்று அந்த ஏழு இடங்களையும் தேடிச்சென்று பார்த்தேன். நில இடங்களில் மனிதர்கள் வரிசையில் நின்று அந்தக் கற்களில் கைவைப்பதற்காக காத்திருக்கிறார்கள்.

வாழ்க்கையின் வலி நெடியது. நீண்ட பாதையோரமாக தொடர்ந்துவரும் நதியைப்போன்று அது வாழ்நாள் முழுவதும் தொடந்துவரக்கூடியது.

உரையாடக்கூட ஒருவருமின்றி வாழுந்து



விழும் மனிதர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

யேசுநாதரைப்போன்று எத்தனை எத்தனை இடங்களில் அவர்கள் கையூன்றி ஆதரவைத் தேடியிருப்பார்கள்?

**சஞ்சயன் செல்லமாணிக்கம்**

தீரா வலியின் ஏக்கத்திலேயே இறந்துபோனவர்களும் இருக்கிறார்கள். வாழ்வு எத்தனை கொடியதாக இருந்திருக்கும் அவர்களுக்கு. ஒவ்வொரு மனிதனும் தனது வலியை எப்படியாவது இறக்கிவைத்துவிடுவதற்காகவே ஓடிக்கொண்டிருக்கிறான். சிலருக்கு அன்பான மனிதர்கள் வலி நிவாரணியாகிறார்கள். இன்னும் சிலருக்கு ஆன்மிகம் நிவாரணமளிக்கிறது. நாத்திகர்கள் நம்பிக்கையை பற்றிக்கொள்கிறார்கள்.

இன்று, இந்தக் கல்லில் கையை வைத்தபோது கல்லின் ஈரத்தையும், குளிர்மையையும் உணரமுடிந்தது.

---

# ஜெல்ட்சினுடன் ஒரு இடப்பெயர்வு... அருமையான கடுவன் நாயின் பாசக்கதை

" பெரஸ்ரோய்க்கா, கிளாஸ்நோஸ்ட்" இந்தச் சொற்கள் உங்களுக்குக் கேள்விப்பட்ட சொற்களாக இருக்கக் கூடும்.

32 வருடங்கள் பின்னோக்கிப் பயணியுங்கள்.1986 இல் சோவியத் ஒன்றியத்தின் இறுதித் தலைவராக இருந்த மிக்கெய்ல் கொபர்ச்சேவ் கம்யூனிசத்தால் மக்கள் சலிப்படைந்திருப்பதை உணர்ந்து அமெரிக்காவின் நாசகாரச் சொல்லைக் கேட்டு அறிமுகம் செய்ததே இந்தச் சொற்கள்.

பெரஸ்ரோய்க்கா என்பது அரசியல் சீர்திருத்தத்தையும், கிளாஸ்நோஸ்ட் என்பது பொருளாதாரச் சீர்திருத்தத்தையும் குறிக்கும் ரஸ்ய மொழிச் சொற்களாகும்.

இந்தச் சீர் திருத்தங்களால் சோவியத் ஒன்றியம் என்ற மாபெரும் வல்லரசு திருந்தவில்லை.

**வேதநாயகம் தபேந்திரன்**

மாறாக 1990 இல் திடீரென உடைந்து 15 நாடுகளாகச் சிதறிப் போனது.
அப்போது ரஸ்யா என்ற பெரும் நாட்டின் தலைவராக பொறிஸ் ஜெல்ட்ஸின் உருவெடுத்தார்.

அந்தத் தருணத்தில் தான் எங்கள் வீட்டில் நின்ற விக்ரர் என்ற 5 வயது கடுவன் நாய் திடீரென நோய்வாய்ப் பட்டு இறந்து போனது. எனது இரண்டாவது தம்பி திருமாறன் பெரும் நாய்க் குட்டிப் பிரியன்.



எங்கேயோ தேடிப் பிடித்து துடியாட்டமான ஒரு கடுவன் ( ஆண் ) நாய்க் குட்டியைப் பிடித்து வந்திருந்தான்.

அப்போது கரண்ட் இல்லாத காலம். றேடியோவும், பேப்பரும் தான் செய்தி தரும் ஊடகங்கள்.

கொண்டு வந்த நாய்க் குட்டிக்கு என்ன பெயர் வைப்பது என எமக்கு யோசனை . தம்பி திருமாறன் சொன்னான் எல்லாப் பக்கமும் ஜெல்ட்ஸின் என்ற பெயர் தானே அடிபடுகிறது.

ஆகவே ஜெல்ட்ஸின் என்று பெயர் வைப்போம் என்றான். எங்களது வீட்டின் அதிஉயர் சபைகளில் ஏகமனதாக அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பேத் சேட்டிபிக்கேற் பதிவது போன்ற பிரச்சினை இதற்கு இல்லாத படியால் பெயர் சூட்டும் படலம் இலகுவாக முடிந்தது.

மண்ணிறமுள்ள துடியாட்டமான ஜெல்ட்ஸின் எமது வழி நடத்தலில் நற்குணமுள்ள நாயாகவும் அனுமதி இன்றி வீட்டு வளவுக்குள் நுழைவோரை அச்சுறுத்தும் நாயாகவும் வளரத் தொடங்கியது.

அதன் வீரதீர பிரதாபங்கள் சொன்னால் எமது குடும்பத்தவருக்கு இனிக்கும்.
ஆனால் உங்களுக்கு கசக்கும் அல்லவா.

1995 ஒக்ரோபர் 30 அந்த மாபெரும் இடப் பெயர்வு வந்தது.

மாலைப்பொழுதில் முக்கியமான ஆவணங்களை எடுத்துக் கொண்டு எனது பெற்றோரின் தாயக மண்ணான வடமராட்சி அல்வாய்க் கிராமத்திற்கு சைக்கிளில் பயணமாக பழைய பூங்கா வீதி வழியாகக் கண்டி வீதிக்கு கச்சேரியடியில் மிதந்தோம்.

எங்கள் பாசமிகு ஜெல்ட்ஸினும் எமக்குப் பின்னால் ஓடியோடி வந்தது. அதனைக் கைவிட்டுப் போக எமக்கு மனமில்லை. அம்மாவும் அப்பாவும் சொன்னார்கள் அது வருமட்டும் வரட்டும்.

இலட்சக்கணக்கான மக்களுடன் நாமும் வீதியில் காலடி அரையடி நடந்து அரியாலை கிழக்கு திரும்பும் வீதியை அடைந்த போது நள்ளிரவு 12 மணி.

அப்போது ஜெல்ட்ஸினும் நிலைமையின் தாற்பரியம் புரிந்து யாரையும் வெருட்டாமல் மௌனமாக எம்முடன் நடந்து வந்தது.
நாவற்குழிப் பாலம் நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் உடைப்பார்களாம். அதனால் அப்பால் சென்று விட வேண்டும் என்ற எச்சரிக்கை ஒன்றையும் எனது அம்மா, அப்பா பொருட்படுத்தவில்லை. பிள்ளைகள் களைத்துப் போய் விட்டார்கள் .வாறது வரட்டும் அரியாலை கிழக்கு நாவலடியிலுள்ள குணமண்ணை வீட்டிற்குப் போய் நித்திரை கொண்டு விட்டு விடியற்காலை மீண்டும் பயணிப்போம் என்றனர். அப்போது ஜெல்ட்ஸினும் எம்முடன் வந்து தங்கியது. விடியற்காலை அப்போ எங்கேயோ தேடிப்பிடித்து பாண் வாங்கி வந்தார். சாப்பிடுங்கள் எனத் தந்து ஜெல்ட்ஸினுக்கும் ஒரு துண்டு போட்டார்.

பின்னர் எல்லோரும் புறப்பட்டோம். கண்டி வீதியைப் பார்த்தோம். சனவெள்ளம்



வடியவே....யில்லை.
நாவற்குழிப் பாலம் உடைப்போம் என்பதும் வெறும் வெருட்டு.

அப்பா சொன்னார் அரியாலை கிழக்கிலிருந்து நாவற்குழி கடல் நீரேரியை ஊடறுத்து நடப்போம்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# விளையாட்டு

## கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தால் சிவானந்தாவுக்கும் உதவி...


(ஜெயா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தினாரால் சிவானந்தா பாடசாலைக்கும் பல உதவிகளை வழங்கும் முகமாக அண்மையில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதுடன் தேசிய மட்டத்தித்திற்கு வீரர்களை கொண்டு சேர்க்கும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமம், மட்டக்களப்பில் உள்ள பாடசாலைகளின் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்தும் நோக்குடன் பல உதவிகளை செய்து வருகின்றது. முதல் கட்டமாக புனித மிக்கல் கல்லூரிக்கு அண்மையில் கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி இருந்தது. அதன் இரண்டாம் கட்டமாக மட்டக்களப்பு சிவானந்தா பாடசாலைக்கும் உதவி செய்யும் நோக்குடன் அண்மையில் பாடசாலையின் அதிபர் திரு. யசோதனுடன் கலந்துரையாடப்பட்டது. இதன்போது சிவானந்தா பாடசாலையின் பழைய மாணவர் சங்க தலைவர் திரு. மங்க஌ேஸ்வரன், செயலாளர் திரு. ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் முன்னாள் மட்டக்களப்பு கல்விப்பணிப்பாளர் திரு. பாஸ்கரன் கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகளான திரு.ரஞ்சன், திரு. காசிப்பிள்ளை, கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவர் திரு.சடாற்சரராஜா, மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இம்மைதானத்திற்கான கிரிக்கெட் பிச் (cricket pitch) முழுமையாக செய்து கொடுப்பதாகவும் எல்லை கோட்டை மையப்படுத்தும் கயிறு (cricket boundary rope ) மற்றும் பிச்சில் விரிக்கப்படும் தும்பினால் நெய்யப்பட்ட மெட்டிங் (Matting) ஆகியன தங்களால் வழங்கப்படும் என கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தாக கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் செயலாளர் திரு.அருள்மொழி கூறினார்.

## மண்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு கழகங்களுக்கிடையிலான போட்டிகள்


(ஜெயா)

பிரதேச செயலகங்களால் வருடா வருடம் விளையாட்டு கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். இந்த வகையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கழகங்களுக்கிடையிலான போட்டிகளுக்கான அறிமுக கூட்டம் அண்மையில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திரு.தயாபரன் தலைமையில பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.ஈஸ்வரன் மண்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் திரு. பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்த கழகங்கள் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

16.02.2019 அன்று சிவானந்தா மைதானத்தில் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன இதில் சிவானந்தா விளையாட்டு கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இரண்டாம் கட்ட போட்டிகளாக 19.02.2019 அன்று எல்லே போட்டிகள் வெபர் மைதானத்தில் நடைபெற்றன. 23ம் 24ம் திகதிகளில் அணிக்கு ஆறு பேர் கொண்ட 5 ஓவர்கள் கிரிக்கெட் போட்டிகள் காந்தி ஸ்டார் விளையாட்டு மைதானத்திலும் பகலவன் மைதானத்திலும் நடைபெறவுள்ளதாகவும் மார்ச் மாதம் 2ம் 3ம் 4ம் திகதிகளில் உதைபந்தாட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும் மண்முனை வடக்கு பிரதேச செயலக



விளையாட்டு உத்தியோகத்தர் திரு. பிரசாத் தெரிவித்துள்ளார்.

## கிராம மட்டத்தில் கால்பந்தாட்டத்தை பரவலாக்கம் செய்த மட்டுநகரின் கால்பந்து வீரன் திரு.எஸ்.ஜெயசீலன்



மட்டக்களப்பின் கால்பந்தாட்ட வரலாற்றில் “சீலா” எனச் சுருக்கமாக அழைக்கப்படும் திரு.எஸ்.ஜெயசீலன் அவர்கள் கவனிப்பிற்குரிய நபராக விளங்குகின்றார். அதாவது இவர் ஒரு சிறந்த மாவட்டத் தெரிவு வீரராகவும் சிறந்த கால்பந்து நடுவராகவும் இயங்கிய அதேவேளை, மட்டக்களப்பின் கிராமப் பகுதிகளில் புதிய இளந்தலைமுறையினருக்கு கால்பந்தாட்டத்தை அறிமுகப்படுத்தி, கால்பந்தாட்டத்தை வளர்த்த ஒரு சேவையாளனாகவும் இனங்காணப்படுகின்றார்.

சீலா அவர்கள் மட்டக்களப்பு பெரிய உப்போடையைச் சேர்ந்தவர். இவருடைய சகோதரர் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரர். தமையனைப் போல் இவரும் கால்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கினார். பெரிய உப்போடைப் பகுதியில் உள்ளூர் செவணசைட் போட்டிகளில் பங்குபற்றி வந்த சில்வர்லைன் எனும் கால்பந்தாட்ட கழகத்தில் விளையாடிய இவர், பின்னாள்களில் மட்டுநகர் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில் அங்கத்துவம் பெற்று சிறந்த கால்பந்தாட்ட வீரராகப் பிரகாசித்தார்.

1980 களின் பிற்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட அணி தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருந்தது. இந்தத் தெரிவு அணியில் ஒரு முக்கிய வீரராக சீலா பங்குபற்றியுள்ளார்.

திரு சீலா அவர்களின் கால்பந்தாட்டத் திறமையினைப் பார்த்து இரசித்த, 1985 களில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளராக கடமையாற்றிய திரு பாறுக் சின்னலெப்பை, “சீலா”வை அழைத்து 1985 ஆம் வருடம் போக்குவரத்துச் சபையில் வேலை வாய்ப்பை வழங்கியுள்ளார். அந்நாட்களில் கால்பந்தாட்டம் ஆடிய வீரர்கள் தமது திறமையினால் அரச வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டார்கள் என்பதற்கு சீலா அவர்கள் மற்றுமொரு உதாரணராக வாழ்கின்றார்.

திரு சீலா அவர்கள் தானுண்டு தன் விளையாட்டுண்டு என தன்னை வரையறுத்துக் கொண்டு கால்பந்து ஆடியவரல்ல. மாறாக நியம முறையிலான கால்பந்தாட்டத்தை கிராம மட்டத்திற்குப் பரவலாக்கம் செய்வதில் அதீத அக்கறையுடன் இயங்கியவர். விசேடமாக போர் மேகம் சூழ்ந்திருந்த காலத்தில் மட்டக்களப்பின் கிராமங்களில் கால்பந்தாட்டத்தை வளப்படுத்தியவர்.

மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தில் மட்டுநகரப் பகுதிகளிலேயே பெரும்பாலும்

**து.கௌரீஸ்வரன்**

கால்பந்தாட்டம் விருத்தியடைந்து விளங்கிய சூழலில் இந்த எல்லைகளைத் தாண்டி கால்பந்தாட்டத்தைக் கிராம மட்டத்திற்குப் பரவலாக்கம் செய்த சில நபர்களுள் திரு சீலாவும் ஒருவராக இருந்துள்ளார்.

மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசத்தைச் சேர்ந்த முதலைக்குடா, கரையாக்கன் தீவு, தாண்டியடி, பனையறுப்பான் முதலிய கிராமங்களில் வாழ்ந்த இளைஞர்களுக்கு கால்பந்தாட்டத்தின் நுட்பங்களைக் கற்றுக் கொடுப்பதில் திரு சீலா அவர்கள் 1990 களின் பின்னர் ஈடுபட்டுள்ளார். இன்று மேற்குறித்த கிராமங்களிலிருந்து பலமான கால்பந்தாட்ட அணிகள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மென் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

St.Joseph's Sports Club
Thannamunai



தன்னாமுனை சென் ஜோசப் விளையாட்டு கழகம் “அணிக்கு ஒன்பது பேர்” கொண்ட 8 ஓவர்கள் மென் பந்து கிரிக்கெட் போட்டியை எதிர்வரும் மார்ச் மாதம் 9ம், 10ம் மற்றும் 16ம், 17ம் திகதிகளில் நடாத்தவுள்ளது. இப்போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். முதலாம் இடத்தை பெறும் கழகத்திற்கு ரூபாய் 20,000 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் இரண்டாம் இடத்தை பெறும் கழகத்திற்கு ரூபாய் 10,000 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் மூன்றாமிடத்தை பெறும் கழகத்திற்கு ரூபாய் 5000 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார். மேலதிக தகவல்களை பெற பின்வரும் தொலைபேசிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி கொள்ளவும் 0767574722, 0755021257 மற்றும் 0766394227

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 24

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சென்ற வாரம், வினாத்தாள் Iக்குரிய கட்டாய வினாக்களுள் கட்டாய வினாவாக அமைகின்ற இரண்டாவது வினாவில் 'அ' பகுதியிலுள்ள வினா அமைப்பைப் பார்த்தோம். இவ்வாரம் 'ஆ' பகுதியில் வரும் வினா அமைப்பைப் பார்ப்போம். இது, மாதிரிவினா என்பதைக் கவனத்திற்கொள்க.

### பகுதி I

2. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(ஆ) "என்ன செட்டியாரையா, நம்ம சிநேகிதத்தைப் பொறுத்துக் கேக்கிறேன். கோவிச்சுக்கிட மாட்டீங்களே?"

"என்ன அண்ணாச்சி, ஒங்களை எப்போ நான் கோவிச்சிருக்கேன்? என்ன இப்பிடிக் கேக்கிறீங்க? நமக்குள்ளே என்ன வேத்துமை?"

"இல்லே நீங்க ரொம்ப தயாள குணத்தோட இருக்கிறீங்க ஊரிலேயும் ஒங்களைப் பத்திப் பெருமையாப் பேசிக்கிறாங்க. கடைப் பையன்களுக்கு உங்களைப் போலச் சம்பளம் குடுக்கிறவங்க இல்லேன்னும் எனக்குத் தெரியும். எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனா, இப்பிடி இருபத்து நாலு மணி நேரமும் கடைப் பையன்களைத் திட்டிக்கிட்டே இருக்கிறீங்க. எப்போ வந்து பார்த்தாலும் எவனையாவது நிப்பாட்டி வச்சிக்கிட்டுப் பொரியிறீங்களே, எதுக்கு? கொஞ்சம் அன்பா ஆதரவா இருக்கலாமில்லே?

"அண்ணாச்சி, அன்பா ஆதரவா இல்லேன்னா நான் திட்டுவனா? அதைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. பயகளை நெசமா எனக்குப் பிடிக்கலேன்னா, ஒரே சொல்லில் கடையை விட்டு வெளியேத்திப்பிட்டு மறு சோலி பாக்க மாட்டனா? சொல்லுங்க. இந்த முப்பது வருசத்திலே, ஒருத்தனை நான் வேலையை விட்டுப் போகச் சொல்லியிருக்கிறனா? பயக விருத்திக்கு வரணும்தானே தொண்டைத் தண்ணியை வத்த வச்சுக்கிட்டிருக்கேன்? கத்திக் கத்தி என் உசுரும் போகுது.

"ஏன் கத்தணும்? நல்லபடியா ஒரு சொல் சொன்னாப் பத்தாதா?"

"அப்படியா சொல்றீங்க அண்ணாச்சி? சரிதான்! நல்லபடியாச் சொன்னா பயகளுக்கு திமிர் இல்லே ஏறிப் போகும்? ஒடம்பு வளையுமா? அந்தக் காலத்திலே நான் கடைப் பையனா இருந்தப்போ எங்க மொதலாளி பேசினதை நீங்க கேட்டிருக்கணும்.....ஹும், அதிலே பத்திலே ஒரு பங்குகூட பேசியிருக்கமாட்டேன் பேசவும் தெரியாது."

"அப்பேர்ப்பட்ட மொதலாளியா அவரு?"

"என்னங்கிறீங்க? என்னப் பத்தி மட்டுமா? என் தாயி, தகப்பன், பாட்டன் அத்தனை பேரையும் சேர்த்துக் கேவலமாகப் பேசுவாரு. புளுத்த நாய் குறுக்கே போகாது. ஒரு நாள் என் மூஞ்சியிலே அஞ்சு பலப் படியையே தூக்கி வீசிட்டாரு. தலையைக் குனிஞ்சனோ, தப்பிச்சேனோ! அப்படியெல்லாம் வசக்கிவிடப் போய்த்தான் நானும் கடை வச்சு யாவாரம் பண்ணி, இவ்வளவு காலமும் ஒருத்தன் பாத்து ஒரு கொறை சொல்றத்துக்கு இடமில்லாமே நிர்வாகம் பண்ணிக்கிட்ட வர்றேன்.'ஷண்முகம் பிள்ளை, செட்டியாரின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரிக்க நினைத்தார். ஆனாலும் அப்புறம் சிரித்துக் கொள்ளலாம் என்று அதை அடக்கிக் கொண்டு, "செட்டியாரையா! ஒங்க மேலே தப்பில்லே, ஒங்க மொதலாளியைச் சொல்லணும், ஒங்களுக்கு நல்லாத்தான் பாடம் சொல்லிக் குடுத்திருக்காரு!..."

செட்டியாருக்கு அவர் சொன்னது விளங்கவில்லை. அதனால் "என்ன அண்ணாச்சி? என்ன சொல்றீங்க?" என்று கேட்டார்.

(i) 'ஷண்முகம் பிள்ளையைப் பற்றி யாது நினைக்கிறீர்?
(ii) செட்டியாரின் ஏச்சுக்கு மத்தியிலும் பையன்கள் தொடர்ந்தும் வேலைசெய்வதற்கான காரணங்கள் என்ன?
(iii) செட்டியாரைப் பற்றிய உமது மனப்பதிவைக் கூறுக.
(iv) ஆசிரியரின் மொழிநடையை மதிப்பிடுக.

(16 புள்ளிகள்)

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

34. இருசக்கரைட்டுக்களுக்கு மூன்று உதாரணங்கள் தந்து, ஒவ்வொன்றையும் ஆக்கும் ஒருசக்கரைட்டுக்களையும் அவை தாக்கமுறும் விதத்தையும் சொற் சமன்பாடாகக் காண்பிக்க.
   1. மோல்றோஸ்
   2. சுக்குரோஸ்
   3. இலக்றோஸ்

குளுக்கோஸ் + குளுக்கோஸ் $\xrightarrow{\text{ஒடுக்கம்}}$ மோல்றோஸ் + $H_2O$

குளுக்கோஸ் + பிறக்டோஸ் $\xrightarrow{\text{ஒடுக்கம்}}$ சுக்குரோஸ் + $H_2O$

குளுக்கோஸ் + கலற்றோஸ் $\xrightarrow{\text{ஒடுக்கம்}}$ இலக்றோஸ் + $H_2O$

35. மேற் குறிப்பிட்ட இருசக்கரைட்டுகளில் தாழ்த்தும் வெல்லங்களையும் தாழ்த்தா வெல்லங்களையயும் தருக.
   - மோல்றோசும் இலக்றோசும் தாழ்த்தும் வெல்லங்களாகும்.
   - சுக்குரோஸ் ஒரு தாழ்த்தா வெல்லம் ஆகும்.

36. ஒரு தாழ்த்தும் வெல்லம் என்றால் என்ன?
   ஒரு சுயாதீன அல்டோஸ் கூட்டத்தை அல்லது ஒரு சுயாதீன கீற்றோஸ் கூட்டத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக ஒரு தாழ்த்தும் காரணியாகத் தொழிற்படக்கூடிய எந்தவொரு வெல்லமும் தாழ்த்தும் வெல்லம் எனப்படும்.

37. தாழ்த்தும் வெல்லம் ஒன்றைக் கண்டறியக்கூடிய ஒரு ஆய்வுகூடச் சோதனையை விபரிக்க.
   - ஒரு பரிசோதனைக் குழாயில் $2cm^3$ தாழ்த்தும் வெல்லக் கரைசலை எடுத்து அதற்குச் சம அளவான பெனடிக்றின் கரைசலை அல்லது பீலிங்கின் கரைசலைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். பின்னர் கொதிக்கும் வரையில் மெதுவாக வெப்பமேற்றவும்.
   - ஆரம்பத்திலிருந்த கரைசலின் நீல நிறமானது படிப்படியாக பச்சையாகவும் பின்னர் மஞ்சள் நிறமாகவும் மாறி, இறுதியில் ஓர் செங்கட்டிச் சிவப்பு நிறத்தைத் தோற்றுவிக்கும்.

38. தாழ்த்தா வெல்ல மொன்றை அறிந்துகொள்ளும் ஆய்வுகூடச் சோதனையை விபரிக்க.
   - மேலே குறிப்பிட்ட முறையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு Fehling கரைசலோடு செங்கட்டிச் சிவப்பு நிறத்தைக் கொடுக்காத பட்சத்தில்,
   - அவ்வெல்லத்துக்கு (உதாரணம் - சுக்குரோசு) சில துளிகள் ஐதான அமிலம் ஒன்றைச் சேர்த்து ஒரு நிமிடம் வரையில் வெப்பமேற்றி, ஆறியதும் அதற்குச் சில துளிகள் NaOH சேர்த்து நடுநிலையாக்கியதன் பின்னர்,
   - Fehling இன்/Benedict இன் கரைசலைச் சேர்த்து வெப்பமேற்ற, கரைசல் செங்கட்டிச் சிவப்பு வீழ்படிவைக் கொடுக்கும்.

மேற்படி பரிசோதனையின் அடிப்படையை விளக்குக.
இருசக்கரைட்டு ஒன்று ஐதான அமிலம் ஒன்றுடன் சேர்த்து வெப்பமாக்கப்படும் போது, அது அதன் எளிய கூறுகளாக நீர்ப்பகுப்படைவதே இதற்குரிய காரணம் ஆகும். சுக்குரோசு ஐதான அமிலத்துடன் சேர்த்து வெப்பமாக்கப்படும்போது, அது குளுக்கோசாகவும் பிறற்றோசாகவும் நீர்ப்பகுப்படைகிறது.

பக்க அனுசரணை



தொடர்ச்சி...

## காரைதீவு உபதவிசாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

உள்ளுராட்சி ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடந்த 11.02.2019ஆம் திகதி நடைபெற்ற சபையின் 12வது மாதாந்த அமர்வில்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கூட்ட ஒழுங்குவிதிகளை 5 சந்தர்ப்பங்களில் மீறியுள்ளதே அதற்கான குற்றச்சாட்டாகும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிசாளர் பேசுகையில் அதனைக் குறுக்கீடு செய்து தவிசாளரை அவமதித்து கை நீட்டிப் பேசியமை, இந்து மதத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் 'கும்பிடு போடவேண்டுமா?' என்று செய்கைமூலம் கேட்டு பேசியமை, தவிசாளரின் உத்தரவினை மீறி மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தினைக் கூறிக்கொண்டிருந்தமை, சட்டத்திற்கு முரணாக தவிசாளரின் அனுமதியின்றி ஒரு ஊடகவியலாளரையும் பொதுமகனையும் சபைக்கு அழைத்து வந்துள்ளமை, மேசையில் அடித்து எழும்புங்கள் போவோம் என கலகம் விளைவிக்கும் நோக்கில் சபை நடந்து கொண்டிருக்கையில் சபா மண்டபத்தை விட்டு வெளியேறியமை ஆகிய 5 குற்றச்சாட்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறித்த 5 குற்றச்சாட்டுகளும் அதே சபையில் பிரேரணையாக கொண்டுவரப்பட்டுவாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.
இதன் பிரகாரம் இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## கிராம மட்டத்தில் கால்பந்தாட்டத்தை பரவலாக்கம்.........

மட்டுநரில் வந்து தமது திறனை வெளிப்படுத்துவதைக் காண்கின்றோம். இதற்கான அடித்தளத்தையிட்ட ஒரு கால்பந்தாட்டப் பயிற்றுநராக திரு சீலா விளங்கியமை பாராட்டுக்குரியது, முக்கிய கவனத்திற்குரியது.

திரு சீலா அவர்கள் மட்டக்களப்பு இருதயபுரத்தில் 1990 களில் ஈஸ்டன்யுத் எனும் கால்பந்தாட்ட அணியை உருவாக்கி உள்ளூர் செவணசைட் போட்டிகளில் பங்குபற்றச் செய்திருந்தார். இத்தோடு புன்னைச்சோலை கோப்றா, குமாரபுரம் ஜொலிஸ்டார் முதலிய கால்பந்தாட்டக் கழகங்களின் வீரர்களுக்கும் கால்பந்தாட்டப் பயிற்சிகளை சில வருடங்கள் வழங்கியுள்ளார். திரு. சீலா அவர்கள் ஒரு சிறந்த கால்பந்து நடுவராக கடமையாற்றி, சிறந்த கால்பந்து வீரர்கள் மட்டுநகரில் வளர்ச்சிபெற காரணமாக இருந்துள்ளார். கால்பந்து மைதானங்களில் சீலாவை அடையாளங்காட்டுவது, ஓட்டத்துடன் இணைந்த விரைவான நடையும் அதற்கேற்ற அசைவுகளும் ஆகும். இவருடைய ஆற்றுகைகள் கால்பந்து இரசிகர்களால் என்றும் மறக்க முடியாதவை.

மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தில் சீலாவின் பங்கையும் பணிகளையும் அரங்கத்தில் வாழ்த்துவோம் மகிழ்வோம்.

தொடர்ச்சி...

## ஜெல்ட்சினுடன் ஒரு இடப்பெயர்வு... அருமையான கடுவன் நாயின் பாசக்கதை

ஆழம் பார்த்து சைக்கிளை வலது புறத் தோள் பட்டையில் வைத்தபடி நான், அப்பா, திருமாறன், வசந்தன் கடலுக்குள்ளால் நடந்தோம்.
அம்மா, தங்கைகள் காயத்திரி, அர்ச்சனா ஆகியோர் நடந்தனர். தோளில் இருந்த சைக்கிளில் பயணப் பொதிகளுடன் நடந்தோம். ஜெல்ட்ஸினைப் பார்த்தோம் நாம் இடுப்பளவு தண்ணீரில் நடக்க அது தனது உடல் வலிமையெல்லாம் எல்லாம் திரட்டி தண்ணீருக்குள்ளால் நீந்தி நீந்தி வந்து கொண்டிருந்தது. இயலாமல் தண்ணீருக்குள் தாண்டு இறந்து விடுமோவெனப் பயம்.தமிழன் வீட்டில் நாயாக வந்து சேர்ந்தமையால் எமது பாழ்பட்ட விதிக்குள் அதுவும் வீழ்ந்து போனது.
ஆனாலும் அது நாம் கரைசேரும் போது தானும் கரை சேர்ந்து விட்டது.

எமது வாழ்வில் நாம் உச்சமாக சந்தோசப்பட்ட பொழுதுகளில் ஜெல்ட்ஸின் கரை சேர்ந்த பொழுதும் ஒன்று. நாவற்குழியில் கண்டி வீதி ஏறினோம்.கேரதீவு வீதி சென்று கூளாறுபிட்டி ஒழுங்கை ஊடாக இன்றைய வட மாகாண சபை இருக்கும் கண்டி வீதியில் மிதந்தோம்.

( மன்னிக்கவும் அந்த நாளையில் நான் கைதடிக்குத்தான் வாழ்க்கைப்பட்டு வரப்போகிறேன் எனத் தெரியாது.
தெரிந்திருந்தால் பயணம் சுபமாக அத்துடன் முடிவடைந்திருக்கும்.) எங்கள் பயணம் கைதடி வந்தவுடன் சைக்கிளில் ஓடிச் செல்லக் கூடிய பயணமாக மாறியது.

நாம் சைக்கிள் ஓட ஓட எமது ஆருயிர் ஜெல்ட்ஸினும் ஓடியோடி வந்தது.
அப்பா ஒரு கட்டத்தில் தனது சைக்கிளின் பின் கரியரில் சாக்குப் போட்டு விட்டு அதில் ஜெல்ட்ஸினை ஏற்றினார். அதுவோ அதில் இருக்க மாட்டேன் எனப் பாய்ந்து ஓடியோடியே வந்தது. 31 ஆம் திகதி இரவு 8 மணிக்கு அல்வாய் வடக்கு சென்று மனேச்சர் மாமா வீட்டை அடைந்த போது எமது ஜெல்ட்ஸினும் எந்த ஒரு சாதனைப் புத்தகத்திலும் பதியப்படாத தனது சாதனை ஓட்டத்தை நிறுத்தியது. எமக்கோ பெரும் பெரும் பெரும் மகிழ்ச்சி. அடுத்த நாள் காலையில் எழுந்து ஜெல்ட்ஸினுக்கு சாப்பாடு வைக்கக் கூப்பிடுகிறேன் துள்ளி ஓடி வர மாட்டாமல் மெல்ல மெல்ல நகர்ந்து வந்தது. தூக்கி விட்டுப் பார்க்கிறேன் பாதங்கள் எல்லாம் புண்ணாகி விட்டது.
உடனேயே நல்லெண்ணை சுட வைத்து மஞ்சள் மாப் போட்டு காய்ச்சி ஜெல்ட்ஸினின் கால்களுக்குத் தடவினேன். அப்படி இரு நாள்கள் செய்ய மூன்றாம் நாள் எங்கள் ஜெல்ட்ஸின் துள்ளித் துள்ளி ஓட எமது மனதும் மகிழ்ச்சியில் துள்ளித் துள்ளி ஓடியது. சரியாக ஆறு மாதங்கள் எம் எந்தையர் பூமியில் இடம்பெயர் வாழ்க்கை முடிய 1996 மே முதலாம் நாளில் இராணுவக் கட்டுப்பாட்டினுள் வந்து விட்ட யாழ்ப்பாணத்தினுள் விரும்பியோ விரும்பாமலோ சென்றோம்.

அப்போது லாண்ட் மாஸ்ரர் சக சைக்கிள் பயணம் எமது ஆருயிர் ஜெல்ட்ஸினும் மீண்டும் பெருந்தூர மரதன் ஓட்டம் ஓடி வீடு வந்தது. கால்கள் புண்ணாக மீண்டும் அதே வைத்தியம். அதன் பின் தம்பி திருமாறன் லண்டன் சென்று விட்டான். ஆனால் அவன் போடும் கடிதங்களிலும், அவன் பேசும் தொலைபேசி அழைப்புகளிலும் ஜெல்ட்சினின் சுகம் கேட்டல் கட்டாயமிருக்கும்.
ஏனெனில் எமது குடும்பத்தில் அதுவும் ஒரு பிள்ளையல்லவா.

2001 இல் எனது திருமணத்திற்கு ஏற்பாடுகள் நடந்தது. எனக்கு அடுத்த தம்பி இளங்கோ 1990 இல் சுவீடன் சென்றவன். அவனும் திருமண நிகழ்வுக்காகவென வந்திருந்தான். எமது உடன் பிறப்பு ஜெல்ட்சினுடன் அவனும் செல்லம் பொழிந்தான். அதுவும் தனது எஜமானர்களில் ஒருவன் என அடையாளம் கண்டு காலை நக்கிக் கொள்ளும். நாளுக்கு 3 நாள்கள் முன்பாக திடீரென நோய்வாய்ப்பட்டு எமது ஆருயிர் ஜெல்ட்ஸின் இறந்து போனது. மாப்பிளையான எனக்கு முகம் வாடி கவலை கொண்டு சாப்பிடாமல் இருந்தேன். அம்மம்மா சொன்னார் " தம்பி உனது திருமண வாழ்விற்கு தடையாக இருந்த கிரகபாவமொன்றைப் போக்கத் தான் ஜெல்ட்சின் உயிரை விட்டுள்ளது .
நீ கவலைப்படாதே " என்றார். மூத்தோர் சொல்லைக் கேட்டு ஆறுதலடைந்தேன்.
எனது வாழ்வில் நன்மை செய்த எத்தனையோ மனிதர்களை எழுதி விட்டேன். அந்த வரிசையில் எமது ஜெல்ட்சினையும் இணைத்துள்ளேன்.

ஜெல்ட்சினின் புகைப்படம் தர முடியாமயையிட்டு வருந்துகிறேன்.

தொடர்ச்சி...

## கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 2)

மட்டக்களப்பு வாவியை ஒட்டிய நிலப்பரப்புகள், குறிப்பாக களி கலந்த நிலப் பரப்புகள் ஏதுவாய் உள்ளன. பன் கிழங்கு நாட்டப்பட்டு பன் பெறப்படுகின்றது. அறுவடை செய்யப்பட்ட பன் புல்லை வெயிலில் காயவைத்து பன்னின் நடுப்பகுதி (பன்னின் குடல் பகுதி) அகற்றப்பட்டு, அமர்த்தி மட்டமாக்கப்படுகின்றது. பின்னர் கொதிக்கும் நீரில் தேவைக்கு ஏற்றாற்போல நிறச் சாயங்கள் (பச்சை, சிவப்பு, நீலம்) இடப்படுகின்றன. பன் புல் அதனுள் இடப்பட்டு நன்கு சாயம் ஏறியதும் மீண்டும் வெயிலில் காய வைக்கப்படுகின்றன. பின்னர் பன்களின் தடிப்பைக் குறைக்க சிறிய கத்தியின் கூரற்ற பக்கதினால் அல்லது இதற்கென்று தயாரிக்கப்பட்ட ஒரு சிறு கருவியினால் வார்ந்து எடுப்பார்கள்.
பின்னர் தேவைக்கு ஏற்ற அளவு, நிறங்களில் பன் புல் இழைக்கப்படுகின்றது. நீள மற்றும் அகலக் கோட்டு வடிவம், சதுரம், குந்திரிக்கம் போன்ற அலங்காரங்களும், கேத்திர கணித் உருவிலமைந்த பறவை, விலங்கு உருக்கள் வரும் வகையில் பின்னப்படும் இக்கைவினை முழுக்க மனிதக் கைகளையே சார்ந்திருக்கின்றன.

பாய்கள், தட்டுகள், பெட்டிகள் என்பவையே பிரதானமாகச் செய்வதாக இப்பிரதேச பன் கைவினையாளர்கள் கூறுகின்றனர். வசதி வாய்ப்புக்கள் குறைவாக, பின் தங்கிய இப்பிரதேசங்களில் தமது உற்பத்தியை விற்பனை செய்து வருமானம் ஈட்டுவதிலும், பிளாஸ்டிக்காலான பொருள்கள் பாவனைக்கு வந்ததாலும் பல கஷ்டங்களை எதிர் நோக்குவதாகவும், தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கான ஏதுவான வசதிகள் இல்லை எனவும் இக்கைவினையாளர்கள் கவலைப்படுகின்றனர்.

உடலுக்கு இதமானதும், கிழக்கின் காலநிலைச் சுவாத்தியத்திற்கு ஏற்றதாயும் பன் உற்பத்திகள் அமைகின்றன.

(தொடரும்)

தொடர்ச்சி...

## மூதாதையரின் காலடிகள்

மோட்சத்தை அடைவது திண்ணம் என்று கூறினார்.

அதற்கமைய அன்னையின் ஈமக்கிரியைகளை அந்தணரையே செய்யுமாறு இராவணன் வேண்ட, அதற்குச் சம்மதித்த அந்தணர் இராவணனை அழைத்துக் கொண்டு திருக்கோணமலைக்கு மேற்கிலுள்ள கன்னியா என்னும் தலத்திற்குச் சென்று, அவ்விடத்தில் தமது கையில் இருந்த தடியினால் ஏழு இடங்களில் குத்திக்காட்டியதாக நம்பப்படுகிறது'.
பத்துத் தலை படைத்த இராவணன் தனது தாயாரான கைகேசிக்கு இறுதிக் கிரியைகள் செய்வதற்காக உடைவாளை உருவி ஏழு இடங்களில் குத்தியதால் அந்த இடங்களில் இந்த ஏழு வெந்நீர் ஊற்றுக்களும் உருவாயின. இந்தக் கிணறுகளினதும் வெப்ப நிலைகளும் சமமாக இல்லை, வெவ்வேறு வெப்ப நிலைகளில் காணப்படுவதால் இந்த ஏழு கிணறுகளிலும் நீராடக் கூடியதாக இருப்பதே இதன் சிறப்பாகும். " 1817 இல் டேவி என்பவர் இங்குள்ள வெந்நீர்க் கிணறுகளின் வெப்பத்தைப் பற்றி பின்வருமாறு கணித்துக் கூறியுள்ளார். முதலாவது - 101 பாகை, இரண்டாவது - 101.5 பாகை, மூன்றாவது - 107 பாகை, நாலாவது - 88.5 பாகை, ஐந்தாவது - 86 பாகை, ஆறாவது - 105 பாகை, ஏழாவது - 90 பாகை.

கன்னியா வெந்நீரூற்றின் அருகில் உள்ள மலையில் இராவணனின் தாய் கைகேசியின் கல்லறை அமைந்துள்ளதாக நம்பப்படுகிறது. தனது தாயின் ஈமக் கிரியைகளை நிறைவு செய்வதற்காக இராவணன் ஏழு வெந்நீர் ஊற்றுக்களை இவ்விடத்தில் உருவாக்கி அதில் நீராடிய பின் அவன் தனது தாயின் இறுதிக் கிரியைகளை நிறைவு செய்த பின் இவ்விடத்திலேயே தாயின் சமாதியையும் அமைத்தான் என இந்திய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் கன்னியாவை சுற்றியுள்ள மலைக் குன்றுகள் தமிழரின் தொல்லியல் தடங்கள் நிறைந்த ஒரு பிரதேசம் காலம் காலமாக இங்கு வழிபாட்டு தலமாக இருந்த சிவன் கோயில் அழிந்து போன நிலையில் இன்று மீண்டும் புனர் நிர்மாணம் செய்யப்படுவது மகிழ்ச்சியே. அண்மையில் கன்னியாப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் பிராமிக் கல் வெட்டு தமிழர்களின் தொன்மையை நிலை நிறுத்தி நிற்கிறது.

அண்மைக் காலத்தில் பௌத்த மயமாக்கும் முயற்சிகள் மிகத் தீவிரமாக நடந்து வருகின்றமையையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

## மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கலாபூசணம் ஆ.மு.சி.வேலழகனின் மூன்று நூல்கள் வெளியீடு

24/02/2009 ஞாயிறு காலை 9.30மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் தமிழ்ச் சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சித மூர்த்தி தலைமையில் "மனிதனுக்கே மனிதன் ஈந்த மாமறை" ஆய்வு நூலும், "கல்லெறியப்பட்ட கண்ணாடிகள்" குறுநாவலும், "இன்பம் பயக்கும் வினை" வரலாற்றுச் சுருக்கம் ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன. பிரதம அதிதியாக மாநகர முதல்வர் கௌரவ தி.சரவணபவனும், கௌரவ அதிதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் திரு.யோ.தர்மரெத்தினமும் கலந்து கொள்கிறார்கள். நூல் நயவுரைகளை சட்டத்தரணி மு.கணேசராசாவும், திரு. வே.தவராசாவும், பேரா.சி.மௌனகுருவும் நிகழ்த்துகிறார்கள். அதிதிகளின் உரைகளைத் தொடர்ந்து படைப்பாளியை கௌரவித்தல் நிகழ்வும் இடம்பெறும்.



# மகா சிவராத்திரி

## அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்

## பதுளை வீதி – புலையவெளி

## 2019.03.04

விரத முறை: காலையில் குளிர்ந்த நீரில் குளித்து விட்டு, வீட்டில் சிவபூஜை செய்வதோடு சிவாலயத்திற்குச் சென்று அங்கு நடக்கும் பூஜைகளில் கலந்து கொண்டுள்ள வேளைகளில் சிவ தோத்திரங்களை ஓதி வரவேண்டும். வசதியானவர்கள் மாலையில் ஆலயத்திற்குச் சென்று நான்கு ஜாம பூஜைகளில் கலந்து கொள்ளலாம். அல்லது வீட்டில் பூஜை செய்து நித்திரை நீத்து, சிவதோத்திரம் பாரயணம் செய்து, மறுநாள் காலையில் புனித நீராடி சூரியன் உதித்து ஆறு நாழிகைக்கு முன் பாரணை செய்ய வேண்டும். அன்றய பகல் பொழுதைச் சிவபுராணம் படித்தோ, அல்லது கேட்டோ கழிக்க வேண்டும். மாலையில் வீட்டில் பூஜை செய்து பால், பழம் சாப்பிட்டு விரதத்தை முடிக்கலாம்.

இந்த விரதத்தை உணவு உண்ணாமல் இருந்து அனுகஷ்டிக்க முடியாதவர்கள், முதல் ஜாம பூஜையின் பின் கொஞ்சம் நீரோ, பாலோ குடிக்கலாம்.

நான்கு ஜாமம் என்பது மாலை 06.00 மணி தொடக்கம் காலை 06.00 மணி வரையும் உள்ள 12 மணி நேரக்காலப் பகுதியைக் குறிக்கும் ஒரு ஜாமம் என்பது 3 மணி நேரம் ஆகும்.

## நான்கு ஜாம பூஜை முறை

**முதல் ஜாமம்:**
பஞ்சகவ்யம் என்று சொல்லப்படுகின்ற பால், தயிர்,நெய்,கோயம். கோசலம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து. வில்வம் சாத்தி, தாமரைப் பூ கொண்டு அர்ச்சனை செய்து, பயற்றம் பருப்பு சேர்ந்த பொங்கலை நைவேத்தியம் செய்ய வேண்டும். இருக்கு வேதம் ஓத வேண்டும்.

**இரண்டாம் ஜாமம்:**
பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்து சந்தனம் தாமரைப்பூவும் சாத்தி, துளசியால் அர்ச்சித்து பாயசம் நிவேதித்து யசுர் வேதம் ஓத வேண்டும்.

**மூன்றாம் ஜாமம்:**
தேனால் அபிஷேகம் செய்து, அரைத்த பச்சைக் கற்பூரத்துடன் சாதிமுல்லைப் பூவும் சாத்த வேண்டும். மூன்று இலைகள் கொண்ட வில்வத்தால் அர்ச்சனை செய்து அன்னம் நிவேதித்து சாம வேதம் ஓத வேண்டும்.

**நான்காம் ஜாமம்:**
கரும்புச்சாற்றால் அபிஷேகம் செய்து, அரைத்து குங்குமப் பூவுடன் நந்தியாவட்டைப் பூவும் சாத்தி, நீலோற்பலப் பூவால் அர்ச்சனை செய்து, அன்னம் நிவேதித்து அதர்வண வேதம் ஓத வேண்டும்.

**பூசைகளில் கலந்துகொள்ள அல்லது உபயங்களை செய்ய விரும்புவர்கள் எம்மை தொடர்பு கொள்ளவும். Tel :-0771516203**

பூசைகள் யாவும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஜெயக்குமார் ஐயா அவர்களால் நடாத்தப்படும்.

**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa